# உதயசூரியன்
UTHAYASURIYAN

விலை ரூபா 1-00

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 27-3-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 26


"சொந்த அரசும்
புவிச் சுகங்களும்
மாண்புகளும்
அந்தகர்க் குண்டாகுமோ
- இனியே
அலிகளுக் கின்ப
முண்டோ?"
— மகாகவி பாரதி

# தமிழ்த் தொழிலாளர் வாயில் மண்!

## யு. என். பி. அரசு அள்ளிப் போடுகிறது!

கடைந்தெடுத்த முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையின் காவலனாக விளங்கும் யு.என். பி.அரசு ஏழை எளிய தொழிலாளர் வர்க்கத்தை எறிந்து விளையாடும் பந்தென நினைத்து காரியமாற்றி வருகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள அடிப்படை உரிமையை முன்வைத்து சிறிலங்கா நாட்டின் ஷா-ஜனாதிபதி ஜே. ஆரின் அநியாய ஆட்சிக்கெதிராக வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை வெறும் வயிற்றோடு வீதியிலே விட்டுள்ளது. இந்நிலையில் யாழ் காரைநகர் குருநகரில் உள்ள சிநோர் தொழிற்சாலைகளையும் இழுத்துப் பூட்டிவிட திட்டமுள்ளதாகத் தெரியவருகிறது.

1974ம் ஆண்டு குருநகரில் ஆரம்பிக்கப்பட்ட மீன்பிடிவலைத் தொழிற்சாலையைச் சிரழித்ததினால் பலர்வேலையிழந்து வாடி வதங்குகின்றனர். இதே தொழிற்சாலையோடு இணைந்த நீள்தூண்டில பகுதிக்கு எப்போதே மூடுவிழா நடாத்தப்பட்டு விட்டது இதனால் வேலை இழந்தவர்களின் சார்பாக தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை கொழும்பு தொழிற்திணைகளத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பதனிடும் பகுதியில் வேலை செய்த பல பெண்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, அதில் பணியாற்றும் உயர் அதிகாரிகளுக்கு கொழுத்த சம்பளம் தரப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்ட மீன் விற்பனவு நிலையங்கள் இழுத்து அடைக்கப்பட்டு விட்டன.

ஆனால் மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் மிகவும் கூடுதலான நட்டத்தில் இயங்கிவந்த சிங்கள நாட்டு மட்டக்குளியா படகுகட்டும் பகுதி சிநோரால் கையேற்கப்பட்டுள்ளது. காரைநகரில் இயங்கிவந்ததலைமைக் காரியாலயமும் இந்த இனவாத அரசால் கொழும்புக்கு மாற்றப்பட்டு விட்டது.

நாடுமுழுவதையும் எப்பாகுபாடுமின்றி அபிவிருத்தி செய்கிறோம்என்றுநாப்பறைகொட்டும் இந்த அரசு தமிழர் பிரதேசங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கே சீல்வைப்பதில் கவனமாக இருக்கிறது.

மேற்படி தொழிற்சாலையில் [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தித் திட்டங்கள் படு தோல்வி

யு. என். பி. அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் படு தோல்வியில் முடிந்துவிட்டன என்று அபிவிருத்திச் செயலாளர்கள் சபை தெரிவித்துள்ளது.

இந்த அபிவிருத்திச் சபை முற்று முழுதாக அரசாங்க அமைச்சுச் செயலாளர்களைக் கொண்ட உயர் அதிகார சபையாகும்

உடனடியாகப் பலன் தரக்கூடிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், கைத்தொழில் முயற்சிகளைப் புறக்கணித்துவிட்டு, மகாவலி அபிவிருத்தித் திட்டம்கோட்டையில் கட்டப்படும் புதிய பாராளுமன்றம் போன்றவற்றிலும் அரசாங்கம் கோடிக் கணக்கில் பணம் செலவழிப்பது தேவையற்றதென இச்சபை கருத்துத் தெரிவித்துள்ளது.

## சாத்திரம் பார்க்கும்
### சந்தற்ப வாதிகள்

தம்மைத் தீவிரவாதிகள் என்று விளம்பரப்படுத்திக் கொண்டு திரியும் ஒரு சாரார் 15-3-81 ல் டாக்டர் எஸ் தர்மலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற இரகசியக் கூட்டத்தில் தமது அணியைத் தீவிரவாத அணி என்று அழைப்பது எண்சாத்திரவிதிகட்கு முரணானது எனக் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

பகுத்தறிவுவாதியான பேரறிஞர் அண்ணா பெரியார் ஈ. வே. ராவின் புகழ்பாடும் ஒரு சுதந்திர எழுத்தாளரும் மேற்படிக் கருத்தை ஆமோதித்து எண் சாத்திரம் பார்ப்பது முக்கியம் என்று வற்புறுத்தினாராம்.

## தந்தை செல்வா பிறந்தநாள்விழா

தமிழீழத்தின் தந்தை மூதறிஞர் செல்வா அவர்களின் பிறந்தநாள் விழாவை வவுனியாவிலும் காங்கேசன் துறையிலும் எதிர்வரும் 31 ம் திகதி சிறப்பாகக் கொண்டாடுவதென்று 20-3-81 ல் யாழ் -- த. வி. கூட்டணிச் செயலகத்தில் கூடிய கூட்டணிச் செயற்குழு தீர்மானித்துள்ளது.

## இயற்கையும் ஜே. ஆருக்கு எதிர்!

நீண்டகாலமாக மழைபெய்யாததால் நாடு முழுவதும் அதிக நேரத்துக்கு மின்வெட்டு அமுல் படுத்தப்படுகின்றது. குருநாகலில் வரட்சியின் கொடுமை தாண்டவமாடுகின்றது - பஞ்சவேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது-

பாவம்-- ஜே. ஆர். இயற்கையும் அவருக்கு எதிராகவே செயற்படுகின்றது!

# காகமும்-பனம்பழமும்

எதிர்பாராதவிதமாக இரு வேறு நிகழ்வுகள் ஒரே நேரத்தில் நடைபெறுவதை விளக்க- 'காகமும் இருக்க பனம்பழமும் விழுந்த கதைபோல' என்று நம்பவர்கள் குறிப்பிடுவது வழக்கம். இதைப்போன்றே--

தமிழீழ இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் ஆரம்பிக்கப்பட்ட கிராமயாத்திரை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே -- மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான தேர்தல் மேமாத இறுதியில் நடைபெறுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தாக்க விரும்பிய சுந்திரன் ஏடு (22-3-81) 'கிராமயாத்திரையின் குட்டு உடைந்தது' எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியில் அபிவிருத்திச் சபைத் தேர்தல் வருவதையொட்டித்தான் த. வி. கூ. பாராளுமன்ற அணி கிராமயாத்திரை மேற்கொண்டதாக கூறப்பட்டதற்கு அபிவிருத்திச்சபைத் தேர்தலே நடப்பது நிச்சயம் இல்லை யென்றும் கூட்டணிப் பா. உக்கள் பதில் கூறிவந்தார்கள். இப்போது குட்டு உடைபட்டுவிட்டது. கிராமயாத்திரை, தேர்தல் யாத்திரைதான் என்பது உறுதிப்படுத்தப்புட்டுவிட்டது என எழுதியுள்ளது.

சந்தற்ப சூழ்நிலை தனக்குச் சாதகமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் சுதந்திரன் இப்படி எழுதியிருந்தாலும் எதையும் கூர்ந்து ஆராயும் தமிழ் மக்கள் அதன் வலையில் விழமாட்டார்கள் என்பது மட்டும் உண்மை -- இருவேறு நிகழ்வுகள் ஒரே நேரத்தில் இடம்பெறுவது அவர்களைப் பொறுத்தவரையில் ஒன்றும் புதுமையானதல்ல என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்

## (சு)தந்திரனுக்கு மானிப்பாய் 'தர்மர்' பதில்!

18-3-81 ல்வெளியான (சு)தந்திரன் இதழில் 'கோப்பாய் எம். பி.போல எல்லோரும் இருந்துவிட்டால் விடுதலை இயக்கத்தில் முரண்பாடு வ்ராது' என்ற தலைப்பில் மானிப்பாய் பா. உ. பேசியதாக வந்த செய்தி 20-3-81 ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற த. வி. கூ. செயற் குழுக் கூட்டத்திலும் எதிரொலித்தது.

இதற்கு மானிப்பாய் பா. உ. திரு.வி, தருமலிங்கம் சரியான பதில் தந்தார்.

'எதையும்' எப்படியும் மாற்றி எழுதுவது சுதந்திரன் ஆசிரியருக்கு கைவந்தகலை. கோப்பாய் பா. உ. வீட்டில் நடைபெற்ற கோப்பாய்த் தொகுதி கிராமயாத்திரை ஆரம்ப நிகழ்ச்சியின் போதுநான் கூறியது இதுதான்--

''தொகுதியின் தேவையை கோப்பாய் எம். பிபோல சிறிதும் கவனியாது விட்டால் எங்களுக்கும் எப்பிரச்சனையும் வராது.

## தொடை நடுங்கும் தீவிரவாதிகள்

தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகி தனித்துவமாகச் செயற்பட்டு வருவோர் தாம் தீவிரவாத அணி என்ற பெயருடன் செயற்படுவதினால் தங்களது அமைப்பு பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது என்ற எண்ணத்தை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தும் என்று அவ்வணியிலேயே ஒருசாரார் 15-3-81ல் டாக்டர் எஸ். தர்மலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற 'குசுகுசு' கூட்டத்தில் அச்சம் தெரிவித்தனராம். (ஆதாரம்-வீரகேசரி 20-3-81)

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுதலைத் தீயைப் பரப்புவதில் பெருமளவு வெற்றி பெற்றுள்ளோம்!

## அல்வாய் தெற்கு கிராம யாத்திரைக் கருத்தரங்கில் சாவகச்சேரி நவம் உரை!

**"பாலஸ்தீன விடுதலை இயக்கத்திலும் பார்க்க மிகக்குறுகிய காலத்தில் சர்வதேச ரீதியில் எமது விடுதலை வேட்கையை பரப்பியுள்ளோம். சர்வதேசநாடுகளில் இலங்கையின் அரசியல் மொழி, மத, கலாசார விவகாரங்கள் இன்று நன்றாகத் தெரிகிறது."**

இவ்வாறு அல்வாய் தெற்கில் நடைபெற்ற கிராம யாத்திரைக் கருத்தரங்கில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப் பட்டு 32 ஆண்டுகளாகியும் இன்னமும் தாயகத்தை மீட்கும் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. அது இன்று தான் சர்வதேச ரீதியில் ஐ. நா. வில் விடுதலை இயக்கம் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. ஆனல் 1974ல் தமிழ் ஈழம் அமைப்போம் என்ற தீர்மானத்தை முன்வைத்து நாம்மிகக்குறுகிய காலத்தில் விடுதலைஅந்தஸ்தை சர்வதேசரீதியாகப் பரப்பியுள்ளோம். சர்வதேச நாடுகளில் 50 நாடுகளுக்கு மேல், இலங்கையின் அரசியல், மொழி, மதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைத் தெரிந்துவைத்திருக்கின்றன. 77ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் உள்ள தூதரகங்கள் தத்தமது நாடுகளுக்கு அனுப்பும் அறிக்கைகளில் எமது பிரச்சினைகளையும் அந்த அறிக்கைகளில் சேர்த்து அனுப்பிவைக்கின்றன

1977ல் நாம் எதிர்க்கட்சித் தலைமையைக் கைப்பற்றியமையால்தான் எமது பிரச்சனைகள் சர்வதேசரீதியில் தெரியவந்துள்ளன. ஸ்ரீமாவோ பிரதமராக இருந்த காலத்தில் இலங்கைக்குவந்த இந்தியப் பிரதமர் இந்திராவை தந்தை செல்வா சந்திக்க ஸ்ரீமாவோ அனுமதி வழங்கவில்லை. இன்று எந்த நாட்டிலிருந்து யார்வந்தாலும் எதிர்க்கட்சித் தலைவரை சந்திக்க வைக்கவேண்டிய கட்டாயம் இருப்பதனுல் எமது பிரச்சினைகளை சர்வதேச நாட்டவர்க்கு நாம் சொல்லக்கூடியதாக இருக்கிறது. இந்தியப்



பிரதமர் மொரார்ஜிதேசாய் விருந்தாளியாக இலங்கைவந்தபோது தமிழர் பிரச்சனையையும் தீர்க்க முன்வந்தார் இது போன்ற சம்பவங்கள்என்றுமே நடந்ததில்லை. தமிழ்ஈழ இலட்சியத்தையும், தமிழரின் பிரச்சினைகளையும், மிகக்குறுகிய காலத்தில் வேறு எந்தத்துறைகளையும் விட எதிர்பாராத அளவுக்கு முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம்.

துன்னலை வல்லியானந்தத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் யாழ்.எம். திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

"கூட்டணித் தலைமைப் பீடம் வெவ்வேறு காலகட்டங்களில் அரசியல் போராட்டங்களைச் சிந்திக்கிறது. அவ்வாறு சிந்திப்பதில் தவறில்லை. கூட்டணிஇயக்கத்தை மக்களாகிய நீங்கள் தட்டிக்கேட்பதில் தவறில்லை. நாங்கள் செல்லும் பாதை தவருனல் ஒதுங்கிவிடுவோம் உங்கள் ஆதரவில்தான் கூட்டணி இயக்கமும் அதன் வளர்ச்சியும் தங்கியுள்ளது. கூட்டணி என்ற மக்கள் இயக்கம் விடுதலைப்பாதையில் முன்னேற உலக நாடுகளின் உதவி அவசியம். உலகநாடுகள் எம் பிரச்சினைகளை அறிந்துள்ளன. ஐ. நா. சபை எங்கள் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும். அதற்காக நாம் பாடுபட்டு வருகிறோம்.

எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழ் மக்களுக்குப் பிரயோசனம் இல்லை. கடந்த 30 ஆண்டுகளாகத் தாம்போதிப் பாலத்தை போட்டுத் தரும்படி நம் தலைவர்கள் கேட்டு நடைபெறவில்லை. பிரதமர் அண்மையில் யாழ். வந்தபோது இதனை நாம் வற்புறுத்தினேம். இப்பாலம் அமைப்பதற்கு எமது இயக்கத்தின் 11 எம். பீ. க்களும் பன்முக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பணம் கொடுக்க சம்மதித்துளோம். அத்தனகல்லை தொகுதிக்கும் அரசு 44 கோடி ரூபாவை ஒதுக்கி வீடமைப்புத்திட்டங்களை உருவாக்கிவருகிறது. அங்கு கொழும்பு மத்தியதொகுதி மக்கள் குடியேற்றப்பட்டு சிறிமா அம்மையாரை அரசியலிலிருந்து வெளியேற்றஅரசுநடவடிக்கை எடுத்துள்ளது.




## சிறைக்கோட்டத்தில்!

இருட்டொன்றே குடிகொள்ளும்!
எப்பக்கம் பார்த்தாலும்
மிரட்டும் பல் தோற்றங்கள்
மிருகம் வாழ் குகை போல!
குருட்டுக் கண் வௌவால்கள்
குடும்பங்கள் நடத்துமிடம்!
முரட்டுப் பேய் மனிதர்களும்
முடங்கிப் போம் சிறைக்கோட்டம்!

தூக்கு எனும் தீர்ப்போடு
தொடர்ந்து வரும் மனிதரெலாம்
பார்க்குமோர் சிறைச்சாலை
பயங்கரந்தான்! ஆனலும்
நீக்கமற தாய் நாடே
நெஞ்சமெலாம்! அதைக்காக்க
ஊக்கமுடன் உழைத்தமகன்
உறங்குமிடம் தவச்சாலை!

உள்ளமதில் சுதந்திரமாம்
ஒளிவிளக்கு! எண்ணமெலாம்
வெள்ளமெனப் பாய்ந்தோட
வீற்றிருந்தான் குமரன் அவன்
கள்ளமிலா முக மெல்லாம்
சுருந்தாடி! கண் நெருப்புக்
கொள்ளி எனத் தகதகக்கும்
கொஞ்சமேனும் வாட்டமில்லை!

நாடுதனை மீட்பதுவே
நாம் செய்யும் தொண்டு என
மூடும் விழிப் போதும் வாய்
முணுமுணுப்பான் தன்னையவன்

காடு என வளர்ந்த புதுக்
கருத்திற்குள் மறந்திடுவான்
தேடுமவன் பொருளெல்லாம்
தேகமதன் சுதந்திரமே!

தரையிலவன் படுத்திருப்பான்!
தட்டி பெரும் சிறைக்கதவை
இரைந்து ஒரு அதிகாரி
எழுப்பி தேன் செய்தியினை
உரைத்துவிட்டுச் சென்றிடுவான்
ஓடி வந்து ஓர் உருவம்
கரைந்துருகும் அவன் முன்னல்
கடுஞ்சூட்டில் நெய்போல!

கன்னியவள் கண்டதுமே
காளையவன் உணர்ச்சியலை
முன்னெழுந்து கூத்தாடும்
முயன்று அதை அடக்கியவன்
அன்னை நலம் வினவிடுவான்
அவள் நலமும் கேட்டிடுவான்
அன்னம் அவள் விழிகளிலே
அருவி வழிந் தோடிடுமே!

அழும் அவளைப் பார்த்து அவன்
அகம் குழையச் சில சொல்வான்
தொழும் எனது தாய் நாட்டின்
தோற்றம் நீ! மறந்ததுண்டோ?
விழும் எனது உடல் என்றும்
வீண் இல்லை வீரன் நான்!
எழும் ஒருநாள் கதிரவனும்
இருள் எங்கோ பறந்தேபோம்!

உனைப்போல சுவைப்பதெது?
உயர் தமிழே! வேறில்லை!
மனப்பேடே! அதற்காக
மரணத்தை ஏற்பேன் நான்!
தினப்போரே செய்வோம் நாம்!
தேசம் நம் தெய்வமடி!
கணப் போதும் உனை மறவேன்
காதலி நீ என் சக்தி!

குமரனவன் சொன்ன தெல்லாம்
குனிந்தபடி கேட்டிருந்த
அமைதியில்லா ஒரு மனத்தாள்
அன்பனிடம் கூறிடுவாள்

உமதுறவு என் வாழ்வின்
ஒளி! அதனைப் பிரிந்தாலோ
அமையுமொரு இருட்கூட்டில்
அணு அணுவாய்த் துடித்திருப்பேன்!

கல்யாணம் ஒரு சடங்கு!
கவலையிலை அதைப்பற்றி!
இல்லறமே துய்க்காமல்
இதயத்தால் வாழ்ந்திருப்போம்!
நல்லவரே! உம் எண்ணம்
நானறிவேன்! நாட்டிற்காய்
சொல்லிடுவீர்! என்செய்ய?
சுதந்திரத் தீ குளித்திடவா?

காதில் நீ தேன் வார்த்தாய்
காதலியே, உனைப்போல
மாதர்தான் வேண்டுமடி
மண்ணெல்லாம் சுதந்திரப்போர்
கீதம் நீ இசைப்பாயே
கிடுகிடுக்கும் பகைக்கூட்டம்
வேதம் நீ! திருவிளக்கே
வெற்றியுன் கையிலடி!

நீர் தொட்ட பணி ஒன்றும்
நில்லாது! நான் தொடர்வேன்!
வேர் விட்ட பயிர் தன்னை
விழிபோலக் காத்திருப்பேன்!
நாரோடு சேர்ந்த பூ
நான் இங்கே கமழ்ந்தாலோ
பேரெல்லாம் உமக்கேதான்
பெருமை மிகக் கொள்கின்றேன்!

கருத்தொன்ருய் ஆன இளம்
காதலரின் உரையாடல்
உறுத்த அவ்வதிகாரி
உறுமுவான்! பேச்செல்லாம்
நிறுத்திடுக! இனிப்பேச
நேரந்தான் இல்லையென
அறுத்த ஒரு மீன்போல
அகம் துடிக்கப் பிரிவாளே!

(வளரும்)

**கவிஞர் வாகரைவாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'தீவிரவாதி'களின் திருத்தொண்டு!

'எத்தனை மனிதர்களோ அத்தனை கருத்துக்கள்' என்பது லத்தீன் பழமொழி. வேறுபட்ட கருத்துக்களை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒரு பொது முடிவுக்கு வந்து அம்முடிவைச் செயற்படுத்துவது தான் எந்த இயக்கத்திலும் வழக்கம். தன் கருத்தொன்றே சரியானது என்று பிடிவாதம் சாதித்து ஏனையோரின் கருத்தை ஏற்க மறுப்பவர் பலர் சேர்ந்து இயங்கும் அமைப்பில் இருப்பதற்கு அருகதையற்றவர். கருத்து வேற்றுமைக்குக் காரணமான விடயம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தாயின் அதை ஓர் மனச்சாட்சிப் பிரச்சனையாகக் கருதி இயக்கத்தைவிட்டு வெளியேறுவது சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாததாகி விடும். அப்படி ஓர் கருத்து வேற்றுமை காரணமாக இயக்கத்தை விட்டு வெளியேறும் ஒருவர் தன் கருத்தை மக்கள் முன் வைத்து ஆதரவு திரட்ட வேறோர் இயக்கத்தை ஆரம்பிப்பதே முறையானது. 1948-ம் ஆண்டு இந்திய- பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டத்தையொட்டி அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசோடு கருத்து மாறுபாடு கொண்டு அதைவிட்டு வெளியேறிய தந்தை செல்வநாயகம், திரு. கு. வன்னியசிங்கம், டாக்டர் இ. மு. வி. நாகநாதன் ஆகியோர் நேர்மையாக ஓர் புதிய அரசியற் கட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரில் ஆரம்பித்து வளர்த்தனர். இதுவே நேர்மையான அரசியல் நடவடிக்கையாகும். தந்தையோடு அந்தக் காலத்தில் நெருங்கிச் செயல்படும் வாய்ப்பைப் பெற்றவன் என்ற முறையில் இந்த வரலாற்று உண்மையை இலட்சிய இதயங்களுக்குக் கூற வேண்டியவனாயிருக்கிறேன்.

இன்றைய காலகட்டத்தில் அரசியல் நேர்மையின் இந்த அரிச்சுவடிப் பாடத்தை நாம் படித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர அணி என்றும் தமிழ் இளைஞர் பேரவையின் விடுதலை அணி என்றும் காலத்துக்குக் காலம் சிலர் வெளியிடும் அறிக்கைகளும் பிரசுரங்களும் அரசியல் அயோக்கியத்தனத்தின் பாற்பட்டவை என்பதை நான் அறிவுறுத்த வேண்டியிருக்கிறது. தந்தை செல்வா சொல்லிலும் செயலிலும் காட்டிய பாதை இதுவன்று. தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் கட்டுப்பாடான இயக்கம். அதன் அமைப்பு விதிகளின் படி எடுக்கப்பட்ட முடிவுகளை ஏற்று நடக்க முடியாதவர்கள் அந்த இயக்கத்தின் பெயரை உபயோகிக்க உரிமையற்றவர்கள். வேறு சில இயக்கங்களைப் போல இப்பெயரை உபயோகிக்கக் கூடாது என்று சட்ட நடவடிக்கை மூலம் தடைசெய்யலாம். ஆனால் அது தமிழினத்துக்கு இழுக்கு. இந்த நிலையை விட்டு வைப்பதும் இயக்கத்தில் குழப்பத்தையும் கட்டுப்பாடற்ற தன்மையையும் ஏற்படுத்தும். தந்தை செல்வாவின் பெயரைச் சொல்லிச் செயற்படும் அன்பர்களை அவர் செய்தது போல நேர்மையாகத் தமக்கொரு பெயரை வைத்துச் செயற்படுமாறு தந்தையின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன். கருத்து வேற்றுமையிலும் கண்ணியம் காத்து நடப்பதே பண்பு.

இலங்கையில் இடதுசாரி இயக்கம் ஒன்றாக ஆரம்பித்தது. பாட்டாளி வர்க்கத்தின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றது. 1941-ம் ஆண்டு யுத்தத்தில் சோவியத் நாடு தாக்கப்பட்ட பின் யுத்தம் மக்கள் யுத்தமாக மாறிவிட்டது என்று ஒரு சாரார் கூற, ஏகாதிபத்திய யுத்தம் தான் என்று ஒரு பகுதியினர் கூற இரண்டாகப் பிளந்தது. ஒரு கூறாகிய இலங்கை சமசமாஜக் கட்சியும், இந்திய போல்ஷெவிக் லெனினிஸ்ட் கட்சியின் இலங்கைப் பிரிவென்றும் இலங்கை சமசமாஜக் கட்சியென்றும் சில ஆண்டுகளிற் பிளவுபட்டது. ஸ்டாலினின் மறைவைத் தொடர்ந்து சோவியத் யூனியனும் மக்கள் சீனாவும் கருத்து வேற்றுமை கொண்டவுடன் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி பீக்கிங், மாஸ்கோ என்று இரண்டு கட்சிகளாகப் பிளவு பட்டது. சீனாவும் அல்பேனியாவும் தமக்குள் வேறுபாடு கொண்டவுடன் சீனச்சார்பு கம்யூனிஸ்ட்கட்சி இரண்டாகப் பிளந்தது. இலங்கைச் சமசமாஜக்கட்சியிலிருந்து புரட்சிவாத சமசமாஜக்கட்சி ஒன்று பிரிந்தது. பின் அதுவும் இரண்டாகப் பிரிந்து நவசமசமாஜக் கட்சி தோன்றியது. இவற்றிற்கு வெளியே மக்கள் விடுதலை முன்னணி, புரட்சிவாத கம்யூனிஸ்ட் கட்சி, இன்னும் எத்தனையோ அணிகளாக இடது சாரி இயக்கம் கூறுபட்டது. அதன் பலனை இன்று தொழிற்சங்கங்கள் அனுபவிக்கின்றன. அரை நூற்றாண்டாக வளர்க்கப்பட்டு தொழிலாளர்களின் உரிமைகள் பலவற்றை வென்றெடுத்த தொழிற்சங்கங்கள் இன்று சிதைக்கப்பட்டு எதேச்சாதிகார முதலாளித்துவ ஆட்சியின் காலடியில் குற்றுயிராகக் கிடக்கின்றன. ஏழை மக்கள் அனுபவித்து வந்த உரிமைகள் பல பறிக்கப்பட்டாலும் நிமிர்ந்து நின்று எதிர்ப்பதற்குச் சரியான தலைமையின்றித் தத்தளிக்கின்றனர்கள். இத்தனைக்கும் காரணம் இடதுசாரி இயக்கங்களை வழி நடத்திய தலைவர்கள் தனிப்பட்ட கருத்து மோதல்களால் இயக்கத்தைப்பிளவுபடுத்தவிட்டுத் தற்பெருமை பேசி நின்றமையே என்பதை இலட்சிய இதயங்கள் புரிந்து கொள்வார்கள்.

தமிழ் இனம் தனித்தனித் தலைவர்களைச் சுற்றி ஆரம்பத்தில் தன் அரசியலை அமைத்திருந்தது. ஓர் அமைப்பாக முதல் எழுந்தது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், மலைநாட்டில் இலங்கை இந்தியர் காங்கிரஸ், பின் இலங்கைத் தமிழரசுக்கட்சி, திரு. சுந்தரலிங்கத்தின் ஈழத் தமிழர்ஒற்றுமைமுன்னணி, திரு. நவரத்தினத்தின் சுயாட்சிக்கழகம் போன்ற கட்சிகள் பிறந்தன. இருபெரும் கட்சிகளாக அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரசும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களைத் தமக்குள் பிரித்து வைத்திருந்தன. இதனால் தமிழ் இனம் இழந்தவை எத்தனையோ 1972-ம் ஆண்டு எஞ்சியிருந்த உரிமைகளையும் பறிக்க ஆட்சியாளர் முற்பட்ட நேரத்தில் இன ஒற்றுமையின் அவசியத்தைத் தலைவர்கள் உணர்ந்தனர். இதற்கு வழிவகுத்தவர்கள் வல்வெட்டித் துறையில் 1971-ம் ஆண்டு எல்லாக் கட்சிகளையும் அழைத்து ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திய பெருமக்களாவார். ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்த தந்தை செல்வநாயகம் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் வீட்டுக்குப் படியேறிச் சென்று- இருபத்தைந்து வருட அரசியல் விரோதத்தை மறந்து- இனத்தை ஒன்றுபடுத்தினர்.

அந்த ஒற்றுமையின் பலன்தான் இன்று உலகநாடுகளில் எல்லாம் ஈழத்தமிழரின் பிரச்சனை உணரப்பட்டிருப்பது; இலங்கைஅரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாகத் தமிழ் இனம் விளங்கிக்கொண்டிருப்பது; முந்திய ஆட்சியில் எந்த மொழி உரிமைகளைஅரசியல் அமைப்பில் இடம் பெறச்செய்ய வேண்டுமென்று கேட்டும்—எம் வேண்டுகோளுக்கு நேர்மாறாக தமிழ்மொழி உபயோகம்பற்றிய சட்டவிதிகள் அரசியல்அமைப்பில் ஓர் அங்கமாகமாட்டா என்று விதி இடம் பெற்றதோ அதிலும் பார்க்கக் கூடிய உரிமைகள் இரு சிங்கள அரசியற்கட்சிகளும் ஒருங்கிணைந்து அரசியல் அமைப்பில் இடம் பெறச் செய்தமை: பண்டா செல்வா ஒப்பந்தத்தில் அதிகாரப்பரவலை எதிர்த்த அதே ஐ.தே. க. மாவட்ட அபிவிருத்திசபைச் சட்டத்தை நிறைவேற்றியமை; ஆரம்பத்தில் இச்சபைகள் நாட்டுப் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று கூறிய சிறீலங்கா சுதந்திரக்கட்சி இன்று அதிகாரம் போதாது என்று வாதாடும் நிலை ஏற்பட்டமை; வவுனியா எல்லையை மாற்ற முனைந்த ஆட்சியாளர் சட்ட பூர்வமாக அம் மாற்றத்தை ரத்துச் செய்து இன்று ஒவ்வொரு மாவட்டத்தின் எல்லைகளும் சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நிலை; இவையெல்லாம் விடுதலையை நாடிநிற்கும் தமிழ் தேசிய இனத்தைத் திருப்திப்படுத்தமாட்டாவாயினும் நாம் கேட்காமலே ஆட்சியாளர் இவற்றைச் செய்யும் நிலையை ஏற்படுத்தியது தமிழர் விடுதலைக்கூட்டணியின் மூலம் தமிழ் இனம் அடைந்த ஒற்றுமையே. இடது சாரிகளின் ஒற்றுமையின்மை நாட்டில் தொழிற்சங்கங்களுக்கும் ஏழைமக்களுக்கும் ஏற்படுத்திய அவல நிலையைப் பார்த்தோம். பிளவு பட்டிருந்த தமிழ் இனம் ஒற்றுமைப்பட்டகாரணத்தால் முன்பு நாம் கோரி அரசினால் உதாசீனம் செய்யப்பட்ட சில உரிமைகள் இன்று கேட்காமலே அரசினால் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையையும் பார்த்தோம். எமது இந்தப் பலத்தை வீசி எறிந்து விட்டு மீண்டும் மாற்றாரின் வேட்டைக் காடாகத் தமிழ் இனத்தை மாற்றுவதா என்பதையே இலட்சிய இதயங்கள் சிந்திக்கவேண்டும்.

சென்றவாரம் கிராமயாத்திரையின் போது இடம் பெற்ற சில நிகழ்ச்சிகள் இதையொட்டி ஒவ்வொருவரும் தம் மனச்சாட்சியிற் கையை வைத்துப் பதில் கூறவேண்டிய கட்டத்தை உருவாக்கியிருக்கின்றன. குறிப்பாக உடுப்பிட்டித் தொகுதியில் நடந்த சில சம்பவங்களை -- அவற்றின் பின்னணியை— தமிழ் இனத்தின் எதிர் காலத்தில் அக்கறை உள்ள ஒவ்வொரு தமிழனும் ஆராயக்கடமைப்பட்டிருக்கிறான். இச்சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் போர்வை ''தீவிரவாதம்'' ஆனால் நடைபெற்ற கேவலமான சம்பவங்களைத் தீவிரவாதம் என்ற முகமூடியைக் கிழித்து விட்டுப்பார்த்தால் கோரமான சாதி வெறி -- வடிகட்டின சாதி உணர்ச்சி அவற்றின் பின்னாலிருப்பதைக் காணலாம்.

இந்தச்சம்பவங்களுக்கு மூல காரணமாயிருந்த ஒரு குழு வல்வெட்டித்துறை நகர சபையிலிருந்து கொம்மாதுறை என்ற பகுதியைச் சாதி அடிப்படையில் பிரித்து விடவேண்டும் என்று சில மாதங்களாகக் கோரி வந்தவர்களாவர். சாதி அடிப்படையில் பிரிப்பதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணி சம்மதிக்கவில்லை. அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால் கூட்டணியின் நிர்வாகத்திலுள்ள வல்வை நகரசபை மூலம் நீதி கிடைக்கச் செய்வோமென்று உறுதியளித்தோம். இந்தக் குழுவினரையும் வல்வை நகர சபைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரையும், வல்வெட்டித்துறைக் கூட்டணிக்கிளைச் செயற்குழுவினரையும் கூட்டிச் சிலமாதங்களுக்கு முன் கட்சிப் பணி மனையில் தலைவர் சிவாவும் நானும் ஆராய்ந்தோம், அவர்களுக்கு மற்றெந்த வட்டாரத்திற்கும் குறையாத அளவுக்கு நகர சபையின் சேவை கிடைத்திருக்கிறது. அன்றியும் உடுப்பிட்டிப் பா. உ. அவர்கள் மூன்று இலட்சம் ரூபாவை அவர்களுக்கு மின்வசதி பெற்றுக் கொடுப்பதற்காக ஒதுக்கியிருந்தார். இவற்றையெல்லாம் விளக்கிக் கூறியும் சாதிவெறி தணியாத சிலர் கூட்டணிக்கு விரோதமாகச் செயற்படுவதற்கு இப்போது எடுத்திருக்கும் போர்வை ''தீவிரவாதமாகும்'' இவர்கள் ஒருபுறம் தமக்கு வாய்ப்பான இடங்களில் குழப்பத்தை விளைத்தனர். மக்கள் எதிர்த்த இடங்களில் -- உதாரணமாகக் கம்பர் மலையில் -- உடன் பின் வாங்கி ஓடினர். தொண்டமானாற்றில் தனிமையில் சென்ற திரு. யோகேஸ்வரனின் ஜீப்பை மறித்தனர். செய்தியறிந்து மக்கள் திரண்டவுடன் ஓடி மறைந்தனர். சாதி அடிப்படையில் தமிழ் இனத்தைக் கூறு செய்வதுதான் தீவிரவாதம் என்றால் சுதந்திரனும் அதன் சகாக்களும் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களே.

கரவெட்டியில் திரு. இராசலிங்கத்திற்கெதிராகப் பகிரங்கமாகவே சில இளைஞர்கள் சாதி வெறியைக் காட்டினர். சாதிப்பெயரைச் சொல்லிக் கூக்குரலிட்டனர். தலைவர் சிவா எவ்வளவோ புத்தி சொல்லியும் அந்தவெறி தணியவில்லை. ''பிரேமதாசா போட்ட பச்சை மாலையோடு பவனிவந்த ப. உ. வையும் பரிவாரங்களையும் கிழியக் கிழியக் கேட்பதற்கு நொந்துபோன இளைஞர்கள் காத்திருக்கிறார்கள்'' என்று 11-3-81 இல் எழுதிய சுதந்திரனுக்கு அந்தக் கும்பலின் 'நோ' என்ன என்பது, அவர்கள் கிழியக் கிழியக் கேட்டது வடிகட்டின சாதி வெறிதான் என்பதும் இப்போதாவது தெரிகின்றதா? தங்கள் பிரசாரத்தால் எத்தகைய இன

(7-ம் பக்கம் பார்க்க)

# தாழ்ந்ததோ தமிழீழம்?



அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் ஆட்சிக்கட்டிலில் ஏறி அமர்ந்து சில மாதங்கள் கூட ஆகவில்லை- 'என் பலமெல்லாம் இழந்து விட்டதுபோல் உணர்கின்றேன்' எனச் சொன்னார்கள்.

செல்வாக்கு என்னும் உச்சியிலிருந்து அண்ணா செங்கோலோச்சத் துவங்கியிருந்த அந்தநேரத்தில் அப்படி ஒரு கருத்தை அவர்கள் வெளியிட நேர்ந்ததேன்?

**புதிதாக ஏற்றுக் கொண்ட பொறுப்பு- சுமை! அதைச் சரிவரச் செய்ய வேண்டுமேயென்ற ஆதங்கம்- முன்போல மக்களோடு பழகமுடியாத நிலை!**

அண்ணாவின் வார்த்தைகளிலேயே சொல்வதானால், அப்போது அவர் ஓர் 'சூழ்நிலையின் கைதி!'

இதனால், என்பலம் குறைந்து விட்டதேயென்று அவர் ஏங்கினர்.

தம்மக்கள் ஆணையைப்பெற்று- தாய்நாட்டை ஆளும்போது அண்ணாவும் கலைஞரும் அளவுக்கு மீறிய பொறுப்போடு நடந்து கொண்டார்களென்றால்- பக்கத்தில் பலம் பொருந்திய ஜென்மப்பகையை வைத்துக் கொண்டு- தன் இனத்தின் மீட்புக்காகப் போராடும் தலைவன் ஒருவன் எத்தகைய சாதுரியத்தோடு நடந்து கொள்வான் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

ஆட்சியில் இருந்த போது- 'எனது காலடிகளை அளந்தே வைக்கின்றேன்' என்று அண்ணா ஒரு முறை குறிப்பிட்டதுபோல-

தலைவர் அமிர் அவர்கள் தமது காலடியை அளந்தே வைக்கவேண்டிய நிலையில் இருக்கின்றார் என்பதை நம்மவர்கள் சிலர்- குறிப்பாக இளைஞர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள்.

காலடிகளை அளந்தே வைப்பது போல- கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கும் தலைவர் அவர்.

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலன் ஆள்பவர்க்கு**

என்று வான்புகழ் வள்ளுவன் சொன்னானே- அதற்கிணங்க-

தூக்கத்தைத் தூரவைத்துவிட்டு- இரவையும் பகலாக்கி இனத்தின் விடியலுக்காக ஆற்றும் பணியிலேயே தன்னை மறந்து விட்டவர் அவர்.

அண்ணாவுக்குப்பின் தமிழகத்தின் அதிகார பீடத்தில் அமர்ந்து கலைஞர் கருணாநிதி ஆட்சி செய்தபோது அவரிடம் பத்திரிகை நிருபர் ஒரு கேள்வி கேட்டார்-

எந்த விஷயமானாலும் முன்பு ஈட்டியெனப் பாய்ந்து செயற்பட்ட நீங்கள்- இப்போது அதிகமாகவே வளைந்து கொடுக்கின்றீர்களே, ஏன்?

பத்திரிகை நிருபரின் இந்தக் கேள்விக்கு கலைஞர் தன்பாணியிலேயே பதில் தந்தார்.

நிறையச் சுமையை முதுகில் ஏற்றிக் கொண்டால் நிமிர்ந்து நிற்க முடியுமா? வளைந்து கொடுக்கத்தானே வேண்டும்?

கருத்தாழம் மிக்க கலைஞரின் இந்தப்பதிலில்- ஒருநாட்டின் அல்லது ஓர் இனத்தின் தலைமையை ஏற்றிருக்கும் ஒருவர்- எத்தகைய பொறுப்போடும்- கவனத்தோடும் இயங்கவேண்டுமென்ற உண்மை பளிச்செனத் தெரிகின்றது. இதுமட்டுமல்ல-

சுமையை முதுகில் சுமந்து கொண்டிருப்பவன்- வளைந்து கொடுப்பது இயற்கையின் நியதி என்ற பாடமும் தெரிகின்றது.

அண்ணாவின் தலைமையில்- திராவிட முன்னேற்றக் கழகத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர் கலைஞர் கருணாநிதி- அப்படிப்பட்டவரே- அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டதும் ஆர அமரஇருந்து காரியமாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்!

தான் எடுக்கும் எந்த ஒரு முடிவிலும் தமிழினம் தற்கொலை செய்து கொள்ளக் கூடாதே என்ற கவலை அவர் உள்ளத்தில் கடல் போல!

இதைப் புரிந்துகொள்ளாத சிலர் - ஏன் இப்போது அவர் முன்போல இல்லை என்று கேட்கிறார்கள்.

கொஞ்சமும் கவலை - பொறுப்பில்லாத மகன்- குடும்பச்சுமையால் நொந்துபோன தந்தையிடம்- தன்னைப்போல் குதித்தாட முடியவில்லையே என்று குறும்பு பேசுவானா?

அப்படிப் பேசினல் அது அவனின் அறியாமையை மட்டுமல்ல, பண்பற்ற தன்மையையும் தானே காட்டும்!

தந்தை செல்வா தன் முதுகிலே எல்லாச் சுமைகளையும் தாங்கிக்கொண்டிருந்த காலத்தில் -

தளபதி அமிர் தளபதியாகவே விளங்கினர்.

நேரடிப் பொறுப்புக்கள் இல்லாத நிலையில் - அவர் நிமிர்ந்து நின்றார்.

பம்பரம்போல் சுழன்று இயக்கப் பணியாற்றினர்.

பெரியாருக்கு ஒரு அண்ணாபோல -
அண்ணாவுக்கு ஒரு கலைஞர்போல -
மகாத்மா காந்திக்கு ஒரு நேருபோல -
சுபாஸ் சந்திரபோஸுக்கு ஒரு தேவர்போல-
திலகருக்கு ஒரு வ. உ. சி. போல -

தந்தை செல்வாவுக்கு அமிர் ஒரு தளபதியாகவே ஜொலித்தார்.

இந்த உண்மையை அவரது எதிரிகளாலும் மறுக்கமுடியாது! ஆனால் இன்று -

அனைத்துப் பொறுப்புக்களையும் அவரே சுமந்துகொண்டிருப்பதினால் -

சில சந்தர்ப்பங்களில் எதிரியோடு சிரித்துப் பேசவேண்டிய நிலை அவருக்கு ஏற்படுகின்றது.

சார்ந்து சத்துருவை வெல்லவேண்டும் என்ற இந்த இராச தந்திரத்தை அவர் கடைப்பிடிப்பதைச் சிலர் கண்டாலே போதும் - விளக்கெண்ணெய் குடித்தவர்கள்போல் ஆகிவிடுகின்றார்கள்.

வளைந்து கொடுப்பதினால் - இலட்சியத்திலிருந்து வழுக்கிவிட்டார் என்று வாதம் புரிகின்றார்கள்.

திடீர்த் தீவிரவாதிகளான இவர்கள் - இப்படியொரு தீயநோக்கை அவர்மீது கற்பிப்பதே தமது தினக் கடமையென நினைக்கின்றார்கள்.

கல்யாணத்திற்குப் பஞ்சாங்கம் பார்ப்பது போல - சுதந்திரப் போராட்டத்திற்கும் நாள் பார்த்தால் என்ன என்று கிளிப்பிள்ளை போலத் திரும்பத் திரும்பக் கேட்கின்றார்கள்.

இப்படிக் கேட்பதின்மூலம் - விடுதலைக்காகப் போராடி வென்ற நாடுகளையே இந்தத் தீவிரவாதிகள் எள்ளி நகையாடுகின்றார்கள்.

நாள் குறித்துவிட்டு - அடிமைநிலையிலிருந்த எந்தவொரு நாடும் போர்க்கொடி தூக்கவில்லை.

இலட்சியத்தில் வெற்றி பெறுவோம் என்ற எண்ணம் எப்போதும் அவர்களிடமிருந்தது - இலட்சியம் வெற்றிபெற அவர்கள் எத்தனையோ வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்தார்கள் - வென்றார்கள்!

இது நம் நாட்டுத் தீவிரவாதிகளுக்குத் தெரியவேயில்லை?

அடுத்த ஆண்டு தமிழ்த் தேசிய மன்றத்தைக் கூட்டுவோம் என்று ஆர்ப்பாட்டம்மட்டும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இது அவசரபுத்தி என்றால் -

அமிர் கொள்கையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார் என்று குற்றம் சாட்டுகின்றார்கள்.

'தீவிரவாதிகள் நாங்கள்' - தீ பரவட்டும் என்றார்கள்.

இதனால் இப்போது எழுந்துள்ள நிலைமையை இவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

தலைநிமிர்ந்து நின்ற தமிழீழம் தலைகுனிந்து விட்டது. தமிழர் பண்பாடு இதுதானா என்று தரணியே கைகொட்டிச் சிரிக்கின்றது.

நாமும் வேதனையால் துடித்துப்போகின்றோம்! அவமானம் நம்மைப் பிடுங்கித் தின்னுகிறது!

**ஆசிரியர் பேசுகிறார்**

## 'பச்சைப்பொய்' எழுதியா பக்கத்தை நிரப்பவேண்டும்?

கோவை மகேசன், தமக்குத் ''தலைக்கனம்'' அதுவும் மருந்துகளால் தீர்க்கமுடியாத ''தலைக்கனம்'' உண்டாகியது என்பதைத் தாமே ஒப்புக்கொண்டு சுதந்திரனில் எழுதியுளர். மதுரைக்கு அவர்பறந்து சென்ற விமானத்தில் அவருக்குத் தலைக்கனம் உண்டானதாம்.

இந்த விமானத்தில் உண்டான தலைக்கனத்தால் தலைகால் தெரியாமல் அவர் எண்ணிய எண்ணங்களை எடுத்தெழுதிச் சுதந்திரனின் பக்கம் ஒன்றை நிரப்பியிருக்கிறார்.

தலைக்கனம் பிடித்து அவர் பிதற்றியிருப்பவற்றை நாம் பெருட்படுத்தாமல் விடமுடியவில்லை, ஏனெனில் அவருடைய தலைக்கனம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடத்திலே பிளவை உண்டாக்க முயல்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கதிரவேற்பிள்ளையைப் பிரித்து அவரை மக்கள் முன் **இரட்டைவேடம் போடுபவராகவும்** தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றக் குழுவிலுள்ள ஏனையோருடன் மாறுபடுபவராகவும் தீட்டிக் காட்டுதற்கு அவர் செய்யும் சூழ்ச்சியையும் எழுதும் பொய்களையும் அம்பலப்படுத்த வேண்டியுளது.

திரு. கதிரவேற்பிள்ளை சனாதிபதியின் படிகளில் பலமுறை ஏறியதைக் கோவை மகேசன் அறிந்தும் அதனை மறைப்பதன் மர்மம் யாது?

ஏன் அண்மையிலே பிரதம அமைச்சர் யாழ்ப்பாணக் கச்சேரியிலே கூட்டிய கூட்டத்துக்குக் கச்சேரிப்படியேறி திரு. கதிரவேற்பிள்ளை ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சமூகம்கொடுத்தாரே அக்கூட்டத்திலே பணம் பொருள் அபிவிருத்திச் சபையைத் திறமையாக இயங்கச் செய்தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதம அமைச்சருக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார் இதனைப் பிரதம அமைச்சரிடம் அவர் மண்டியிட்டார் என்று கோவை மகேசன் கூறுவது தர்மமா?

24 மணி நேரமும் அவர் விடுதலை பற்றியே சிந்திப்பவர் என்று மகேசன் கூறி **அவரை இரட்டை வேடக்காரராக ஆக்கலாமா?** தமது தொகுதி அபிவிருத்தி பற்றிச் சிந்தித்து சிலருடன் கலந்துரையாடியும் தேவையான அபிவிருத்தி வேலைகளின் பட்டியல்களை ஆண்டுதோறும் அவர் அரசுக்குசமர்ப்பிக்கிறாரே! விடுதலையையும் அபிவிருத்தியையும் பற்றிச் சிந்திக்கும் அவரை 24 மணித்தியாலமும் நித்திரை கொள்ளாமலும், நீதி மன்றத்துக்குச் செல்லாமலும், விடுதலையைப் பற்றியே சிந்திப்பவர் என்று கோவை மகேசன் பச்சைப் பொய்யைஎழுதி ஏன்அவரைப் பரிசு கெடுக்க வேண்டும்?

## முத்தமிழ் விழா

இம்மாதம் 26ம் திகதி முதல் 28ம்திகதிவரை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் மிகச் சிறப்போடு முத்தமிழ் விழா நடைபெறவிருக்கின்றது.

இவ்விழாவில் கவியரங்குகள், இசைநிகழ்ச்சிகள், நாடகங்கள், நடனங்கள், பட்டிமன்றங்கள், ஆய்வரங்குகள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றம் செய்துள்ளது.

"உதயசூரியன்"
சந்தா விபரம்

| | |
|---|---|
| **இலங்கை** | |
| ஒரு ஆண்டு | 60-00 |
| அரை ஆண்டு | 30-00 |
| **இந்தியா** | |
| ஒரு ஆண்டு | 75-00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரையில் ஒலித்த மாணிக்கத் தமிழ்!

இம்மாநாடு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் தலைமையில் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது தமிழக அமைச்சர்கள் பலர் பல்வேறு குழுக்களிலும் அங்கம் வகித்துள்ளனர். மாநாட்டின் ஆரம்ப விழா, கண்காட்சித் தொடக்க விழா 'குமரிக் கண்டம்' 'திரைப்படவிழா' நிறைவுவிழா என்பவற்றிற்கு முதலமைச்சர் தலைமைதாங்கிஞர். அவரது உரைகள் அரசியல் சார்ந்ததாகவும் தனிப்பட்டோர்கட்டு அரசியல் பதில்கள் அளிப்பதாகவும் அமைந்ததினுலும் அமைச்சர்வீரப்பன் ஏனைய அமைச்சர்கள் ஆகியோரின் உரைகளில் அரசியல்

ஆரம்பத்தில் முதல்வர் எம். ஜி. ஆர் "கருணுநிதி ஆட்சியில் குதிரைப் பந்தய ஒழிப்பு நினைவாக வைக்கப்பட்ட குதிரைச் சிலைகளை'' அகற்ற வேண்டும் எனக் கூறியதன் விளைவாக கருத்துமோதல் இருவருக்கும் ஏற்பட்டது. பின்பு கருணுநிதி தி. மு. க. இம்மாநாட்டில் பங்குபற்ருது என்றும் முறையாக அழைப்பிதழ் தரப்படவில்லையென்றும் கூறிஞர். இதனுல் தி.மு.க. வினர் இம்மாநாட்டில் பங்குகொள்ள வில்லை.

தமிழ்ப் புலமையால் அனைவரையும் கவர்ந்து விழாவில் கதாநாயகனுக அவர் மாறியிருப்பார் என்று அவர்கள் கூறிய கருத்து சற்று சிந்திக்கக்கூடியதே! கருணுநிதி மாநாட்டில் பங்கு பற்ருதது குறித்து பலரும் கவலை தெரிவித்தார்கள். எனினும் நாம் ஆழமாக நோக்கும் போது பொதுவாகவே அரசியல் வாதிகள் தமது செல்வாக்கினை நிலைநாட்டிக் கொள்ள இத்தகைய தமிழ் விழாக்கள்,மாநாடுகளைப்பயன் படுத்திக் கொள்வது அவர்களின் ஒருகலையாகவே வளர்ந்

அமைந்து அழகூட்டின. டி. பி. எம். பெரியசாமி தலைமையில் திருமதி சத்தியவாணி முத்து நக்கீரர் தோரணவாயிலையும், டாக்டர். இராசா. சர். எம். ஏ. முத்தையா செட்டியார் தலைமையில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் சேரன் தோரணவாயிலையும், முன்ஞள் தமிழக முதல்வர் திரு.எம்.பக்தவத்சலம் தலைமையில் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் சோழன்தோரணவாயிலையும், திரு. எஸ்.ஆண்டித்தேவர் தலைமையில் மதுரைமேயர் எஸ்.கே.பாலகிருஷ்ணன்பாண்டியன் தோரணவாயிலையும், பிரபல இலக்கிய கர்த்தா திருமதி சௌந்தரா கைலாசம் தலைமையில் திருமுருக கிருபானந்த வாரியார் அங்கையற்கண்ணி தோரண வாயிலையும் திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

## மாநாட்டுத் தொடக்க விழா

தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் பந்தயத்திடல் அரங்கத்தில் மாலை 6 மணிக்கு விழா ஆரம்பமாகியது. தமிழக ஆளுநர் மேதகு. திரு. சாதிக்அலி அவர்கள் தொ

இருந்ததால் பலராலும் வியந்து பேசப்பட்டது.

திரு. ஆஷர் என்பவர் தூய தமிழில் உரையாற்றியதுடன் ஆங்காங்கே 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' போன்ற வாசகங்கள் கவிதையடிகள் ஆகியவற்றையும் கூறி அனைவரையும் வியப்பிற்குள்ளாக்கிஞர். இவர் பிரிட்டனைச் சேர்ந்த வெள்ளையர் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து மலேசியத் தமிழர் ஒருவர் ஆங்கிலத்தில் பேசி இறுதியில் தமிழில் சில வசனங்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிஞர். இவர் தமிழர் எனினும் மலேசிய மொழியிலேயே கல்வி பயின்றவர். "இந்த மாநாட்டில் நான் தமிழில் பேசாவிட்டால் தமிழனே அல்லன்.'' என்று உணர்ச்சிகரமாகக் கூறி அனைவரது கைதட்டல்களையும் பெற்றுக் கொண்டார்.

இறுதியில் மாண்பு மிகு டாக்டர். நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் தமது நன்றியுரையை நிகழ்த்திஞர். அரசுக் கலைஞர் மதுரை சோமு அவர்களின் இசை நிகழ்ச்சியுடன் விழா இனிது நிறைவேறிற்து. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்களின் நாதஸ்வரத்துடன் விழா ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

## தமிழறிஞர்கள் சிலைகள் திறப்புவிழா- 4 - 1 - 1981

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை உருவாக்கிய பழம் பெரும் அறிஞர்கள்; கவிஞர்

# ஆங்கிலேயர் பாடிய

வாடை அதிகம் காணப்பட்டதிஞலும் தமிழ்பற்றி, தமிழ் சிறப்புப் பற்றி அவர்களின் உரைகளிடையே பொருட்செறிவு மிகக் குறைவாகக் காணப்பட்டமையாலும்தான் அந்த ஜப்பானிய அறிஞர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார் போலும்.

கடந்த சில அரசியல் வரலாலாறுகளையும் சற்று நோக்கும் போது சில உண்மைகள் தெளிவாகின்றன. அறிஞர் அண்ணுவின் பாசறையில் வளர்ந்த திரு. கருணுநிதியும், திரு. எம். ஜி. ஆரும் அண்ணுவின் மறைவுக்குப்பின் அரசியலில் இரு துருவங்களாகி இன்று தமிழக சட்ட சபையில் எதிர் எதிராக அமர்ந்திருக்கிருர்கள். திரு. கருணுநிதி அவர்கள் தமிழ் மொழியை மக்கள் மனம் கவரத்தக்க முறையில் கையாள்வதில் சொல்லாட்சித் திறன் படைத்தவர். பல கவியரங்குகள், உரைகள் என்பனவற்றை மிகக்கவர்ச்சிகரமாக நடத்தி மக்கள் மனங் கவருதுடன் மட்டுமன்றி, கட்டுரைகள் மூலம் மக்களைத் தம்பால் இழுப்பதில் வல்லவர்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களோ தனது சினிமாப் படங்கள்மூலம் ஏராளமான தொழிலாளர், இளைஞர்கள் போன்ருேரை ரசிகர்களாகக் கொண்டுள்ளவர். பல நல்ல கொள்கைகள் திரைப் படங்களில் பிரதிபலிப்பதால் பலரிடையே ஒரு நல்லபிப்பிராயத்தைப் பெற்றுள்ளவர். குறிப்பாக திரைப்படங்களில் தாய்மையை மதிப்பதனுல் தமது கட்சிக்குத் தாய்க்குலத்தின் தனி ஆதரவைப் பெற்றவர். இதனுல் மத்திய அரசால் கலைக்கப்பட்ட தனது ஆட்சியை மீண்டும் தமிழ் நாட்டில் நிலைநாட்டியவர். இவர்கள் இருவரும் தற்போது சட்ட சபையில் எதிர்எதிராக அமர்ந்துள்ளதனுல் சில அரசியல் கசப்புணர்வுகள் வெளிக்காட்டப்படுவது ஆச்சரியப்படத்தக்க ஒன்றல்ல.

கலைஞர் கருணுநிதி அவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. அவரது தமிழைக்கேட்க ஆவலுடன்இருந்த தமிழக, உலகத் தமிழ்மக்கள் அனைவருக்கும் இந்த விடயம் சற்றுஏமாற்றத்தை அளித்தது.

இந்நேரத்தில் தமிழ்நாட்டில் தமிழக விவசாயிகள் போராட்டம் வலுத்தது. சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு சிறை வைக்கப்பட்டார். விவசாயிகள் 9 பேர் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டால் பலியாஞர்கள். பல்லாயிரக்கணக்காஞேர் சிறை வைக்கப் பட்டார்கள். இதனை திரு. கருணுநிதியின் கட்சிப் பத்திரிகையான முரசொலி விவசாயிகளைப் பலியாக்கி விட்டு இம்மாநாடு ஒரு கேடா? இது எம். ஜி. ஆரின் அரசியல் ஷோ. கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்கிறீர்கள். ஆனுல் ''விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் விலை உயர்வுப் போராட்டத்தில்'' ஈடுபட்ட விவசாயிகளைக் கொன்றுகுவிக்கிறீர்கள்தமிழ்ப் பற்றிஞல் அல்ல உங்கள் அரசியல் செல்வாக்கை உயர்த்தவே இம்மாநாடு "மாநாட்டில் பல ஊழல்கள்'' என்று குரலெழுப்பியது. குரலெழுப்பிய நேரம் மாநாடும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்நேரத்தில் அதற்குரியபதில்களை தமிழக அமைச்சர்கள் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளில் மறைமுகமாகவும் நேரடியாகவும் கூறத் தவறவில்லை. 'ஊழல் என்று கூறுவோர் மீது வழக்கு வரும்' என்ருர் எம். ஜி. ஆர்.

இதனுல் தான் "தமிழ் மேடை அரசியல் மேடையாயிற்று. தமிழாய்வில் அரசியல் புகுந்தது'' எனும் கருத்து வலுவடைந்தது. இதுதான் இம்மாநாட்டின் அரசியல் பின்னணி. பல தமிழ்நாட்டு மக்களுடன் நான் அளவளாவிய போது "கருணுநிதி இவ்விழாவுக்கு வந்திருந்தால் கதையே மாறியிருக்கும்'' தம் தமிழால்

துள்ளது. இத்தகைய செயல் தடுக்கப்பட வேண்டும். இத்தகைய ஆய்வு முயற்சிகட்கு அரசு தனது நிதி உதவியை நல்கலாம் ஆனுல் அடிப்படை நோக்கமான தமிழாய்வு தமிழ் வளர்த்தல் போன்ற முயற்சிகளை பின்தள்ளும் அரசியலை இத்தகைய மாநாடுகளில்கலக்காதிருப்பது தமிழுக்கும், தமி

# அருந்தமிழ்க் கவிதை!

ழினத்துக்கும் செய்யும் பெரிய தொண்டு. இத்தகைய மாநாடுகளில் அமைச்சர்கள், ஏனைய அரசியல் வாதிகளின் குறுக்கீடுகள் தவிர்க்கப்பட்டு தமிழறிஞர்கள் பேராசிரியர்கள் ஆகியோர் முற்றுமுழுதாக ஈடுபடுத்தப்படவேண்டும் அப்பொழுது தான் உண்மை நோக்கம்நிறைவேறும். உருப்படியானவை உருவாகும்.

> ✻ பல தமிழ்நாட்டு மக்களுடன் நான் அளவளாவிய போது "கருணுநிதி இவ்விழாவுக்கு வந்திருந்தால் கதையே மாறியிருக்கும்''. தம் தமிழால் தமிழ்ப் புல்மையால் அனைவரையும் கவர்ந்து விழாவில் ககாநாயகனுக அவர் மாறியிருப்பார் என்று அவர்கள் கூறிய கருத்து சற்றுச் சிந்திக்கக்கூடியதே! கருணுநிதி மாநாட்டில் பங்குபற்ருதது குறித்துப் பலரும் கவலை தெரிவித்தார்கள்.
>
> — இணுவை ந. சண்முகப்பிரபு
>
> பேராதனைப் பல்கலைக் கழகம்

## நிகழ்ச்சிகளின் சிறப்பு அம்சங்கள்

### தோரணவாயில் திறப்புவிழா 4—1—1981

தமிழ் வளர்த்த மன்னர்களான சேரன்,சோழன், பாண்டியன் ஆகியோரினதும் நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று கூறிய வீரமிக்க தமிழ்ப் புலவன் நக்கீரனினதும், அங்கயற்கண்ணியினதும் சிறப்பினை நினைவூட்டும் வகையில் பல்வேறு சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த தோரண வாயில்கள் 4-1-81ல் திறந்து வைக்கப்பட்டன. இவை மதுரை நகரின் வீதிகளின் நடுவே ஆங்காங்கு

டக்க உரையை நிகழ்த்த தொடர்ந்து சர்வ கட்சித் தலைவர்களும் தமது வாழ்த்துரைகளை நிகழ்த்திஞர்கள். திருவாளர்கள் பக்தவத்சலம், குமரி அனந்தன், பிரிட்டனைச் சேர்ந்த ஆஷர், ம. பொ. சி, இலங்கைஎதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம், இலங்கை சபாநாயகர் பாக்கீர் மாக்கார் அமைச்சர்கள் தொண்டமான், இராசதுரை, மலேசிய மொறிஸியஸ் பிரதிநிதிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிஞர்கள்.

திரு. அமிர்தலிங்கம் அவர்களின் உரை சிறிது ஈழத் தமிழர் தம் பிரச்சனையை கோடிட்டுக் காட்டுவதாக அமைந்தது. அதற்கு முதல்வர் எம். ஜி. ஆர். தமது தலைமையுரையில் தனது நிலையைத் தெளிவு படுத்திஞர். எல்லைகள் வரையறுக்கப்பட்ட பின்பு உங்கள் உள்நாட்டுப் பிரச்சனைகளில் நிச்சயம் நாங்கள் தலையிட முடியாது. அங்கு நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் உங்கள் பிரச்சனைகளைக் கூற உரிமையும் உண்டு. திறமையும் உண்டு. ஆனுல் இது முழுக்க முழுக்கத் தமிழ் மாநாடு. தயவுசெய்து இதில் அரசியலைக் கலக்காதீர்கள், எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் எதுவும் பேசலாம். ஆனுல் ஆட்சியிலிருப்பவர்கள் அப்படிச் செய்ய முடியாது, இவ்வாறு இரு பொருள் பட அவர் பேசிஞர்.இது பல ஈழத் தமிழர்களின் மனதில் மிகுந்த வருத்தமூட்டியதை அவர்களுடன் உரையாடியதிலிருந்து அறியக் கூடியதாயிருந்தது.

அமைச்சர் இராசதுரை பேசுகையில் "தமிழ் இலங்கையில் நீதிமன்ற மொழியாக்கப்பட்டிருக்கிறது. தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் தமிழரின் பல பிரச்சனைகளைத் தீர்த்துள்ளது'', என்றும் கூறிஞர். அவரது பேச்சு இலக்கியச் சுவையுள்ளதாக

கள்; தமிழினை உலகெங்கும் பரப்பிய தூதர்கள்; வெளி நாட்டு அறிஞர்கள்; பன்னிரு வருக்கு சிலைகள் அமைக்கப் பட்டன. திருவாளர்கள், ப. உ. சண்முகம் தலைமையில் வி. ஆர். நெடுஞ்செழியன் தொல்காப்பியர் சிலையையும், க. இராசாராம் தலைமையில் திருமதி. கோமதி சீனிவாசன் திருவள்ளுவர் சிலையையும்,



ப. நெடுமாறன் தலைமையில் கல்வியமைச்சர் செ. அரங்கநாயகம் தனிநாயகம் அடிகள் சிலையையும், பாவலர் எம். முத்துச்சாமி தலைமையில் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் ஆறுமுகநாவலர் சிலையையும், திறந்து வைத்தனர். வீரமாமுனிவர், உ. வே சாமிநாத ஐயர், தேசிகவிநாயகம்பிள்ளை வி. கல்யாணசுந்தரஞர், சோமசுந்தரபாரதி, வேதநாயகம் பிள்ளை, ஜெபர்ட். டி.நொபிலி பாண்டித்துரைத்தேவர் ஆகியோரின் சிலைகள் அமைச்சர்கள், தமிழ் சான்ருேர்கள் அகியோரால் திறந்து வைக்கப் பட்டது. அமைக்கப்பட்ட சிலைகளின் விபரம் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முன்பாக அமைந்த தோரண வாயிலிலும் பொறிக்கப்பட்டிருந்தன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் அடிக்கும் பகற்கொள்ளை!

## அதற்குப் பெயர் பணவீக்கம்!

அரசாங்கம் வருவாய்க்கு மிஞ்சிச் செலவு செய்வதுதான் விலைவாசி உயர்வுக்கு முதல் காரணம் என்பதைப் பார்த்தோம். இதனல் பற்ருக்குறை நிதிமுறையும் உருவாகிறது.

விலைவாசி உயர்வுக்கு இரண்டாவது முக்கிய காரணம், ஒழுங்கான அஸ்திவாரம் இல்லாமலே பொருளாதார கட்டடத்தை எழுப்பச் செய்யப்படும் முயற்சியே.

ஒரு நாட்டின் பொருளாதாரமாக இருக்கட்டும், ஒரு வீடாக இருக்கட்டும், - அதை உருவாக்க முதலில் ஒரு பிளான் தேவை. அதன் பிறகு, ஒழுங்கான, பலமுள்ள அஸ்திவாரம் போட்டு, அதன் பிறகுதான் கட்டடத்தை எழுப்ப வேண்டும்.

விவசாயமும், பொதுவாக மக்கள் பல ஆண்டுகளாகக் கற்று வந்த கைத்தொழில்களும், நாட்டிற்கும், அதன் பொருளாதாரத்திற்கும் அஸ்திவாரம். ஆகையால், முதலில் இவற்றைத்தான் சீர்படுத்தி, விரிவுபடுத்தியிருக்கவேண்டும்.

அடுத்ததாக, வருவது, மக்கள் சாதாரணமாக உபயோகிக்கக் கூடிய பொருட்கள் அதாவது, துணிவகை போன்றவை. மூன்ருவதாகத்தான் எஃகு போன்ற கனரகத் தொழில் வகைகள்.

பொருளாதார வளர்ச்சியின் இயற்கையான வழி ஒரு நாட்டின் அடிப்படையான சொத்தை விரிவாக்குவதுதான். நம் நாட்டில் விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி (குறிப்பாக கிராமங்களில் கிணறுகள், குளங்கள் போன்றவை) உர வகைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், நியாய விலையில் நல்ல விதைகள், சுலப வட்டியில் கடன், அறுவடைக்குப் பின் தேவைப்படும் கிடங்குகள், மார்க்கெட் வசதி, கிராமப் புறங்களில் நல்ல சாலைகள் போன்றவற்றை முதலிலேயே செய்து கொடுத்திருக்க வேண்டும். இவற்றைத் தவிர, தங்கள் உழைப்பு வீண்போகாத வகையில் முக்கியமான உணவுப் பொருட்களுக்கு தங்களுக்கு உரியவிலை கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் விவசாயிகளுக்கு ஏற்படுத்தியிருக்க வேணடும்.

ஒரு விவசாயி செய்த உணவுப் பொருள் உற்பத்தியில், அவனுடைய உணவுத் தேவைகளுக்கும், அடுத்த பருவத்தின் விதைகளுக்காகவும் போக எஞ்சி நிற்பதுதான் விவசாயிகள் அல்லாதவர்களுக்குப் போய்ச் சேருகிறது. அதாவது, நகரங்களில் வாழும் 30 சதவிகித மக்களுக்காகவும் விவசாயி உணவுப் பொருளை உற்பத்தி செய்கிருன். அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அவனுடைய உணவு உற்பத்தி பயன்படுகிறது. உலக வியாபாரத்தில் உணவுப் பொருள் ஏற்றுமதி மிக முக்கியமான ஒன்று.

இப்படி உணவுப் பொருள் உற்பத்தி செயயும விவசாயிக்கு அவற்றின் விற்பனையிலிருந்து, ஏதாவது ஒரு உபரித் தொகை கிடைக்கும் இதில் ஒரு பங்கை, தன்னுடைய விவசாயத் தொழிலைச் சீர்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் அவன் செலவிடுகிருன்.

இப்படி விவசாயிகள் மூலமாக வாங்கப்படும் பொருட்களுக்கு போகப் போக தேவை அதிகரிக்கும். ஆகையால், இவற்றின் நல்ல விற்பனையையும், லாபத்தையும் பார்த்து அந்தமாதிரித் தொழில்களில் பண முதலீடு செய்யப் பலர் முன் வருவார்கள். இந்த முதலீட்டுக்குத் தேவையான பணம் கூட சில சமயங்களில் விவசாய வருமானங்கள்மூலம் கிட்டும்.

இப்படிப்பட்ட தொழில்கள் நன்ருக நடக்கும்போது, மேலும் மேலும் அவற்றைச் சீர்படுத்தவும் விரிவாக்கவும் நல்ல இயந்திரங்கள் தேவைப்படும். அப்போது அதற்கான இயந்திரத்தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இந்தத் தொழிற்சாலைகளினல் எஃகு, மின்சார டிரான்ஸ்பார்மர்கள் போன்றவற்றிற்குத் தேவை அதிகரிக்கும். அந்த நிலையில் கனரகத் தொழில்கள் நிறுவப்படும். பொருளதார வளர்ச்சியின் கடைசிக் கட்டத்தில் இவை வரும்.

பண வீக்கம் இல்லாத வகையில், பொருளாதார வளர்ச்சி ஏற்பட இதுவே இயற்கை வழி. இந்த வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், முதலீட்டுக்குத் தேவையான பணம் அதற்கு முன் கட்டத்திலேயே உற்பத்தியின் மூலம் உருவாக்கப்படுகிறது.

நமது நாட்டு மக்களிடம் இருக்கக் கூடிய திறமைகள் நமது சொத்துக்களில் ஒன்று. இம்மாதிரித் திறமைகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டால் அதன் மூலம் வேலை வாய்ப்புக்கள் கிட்டுகின்றன. தவிர, ஏற்றுமதிக்குப் பொருட்களும் கிட்டுகின்றன.

அவர்கள்அறியாமலே அவர்களுடைய சேமிப்புக்களும் கூட பறிக்கப்படுகின்றன.

**உதாரணங்கள்:** 1 பென்ஷன் வாங்குபவர்களுக்கு வருடா வருடம் அதே தொகைதான் கிடைக்கிறது. எண்ணிக்கையின்படி பார்த்தால் இதில் குறைவு எதுவும் இல்லை. ஆனல், ஒவ்வொரு வருடமும் கழியும் போதும், ரூபாவின் மதிப்புக் கீழே போய்க்கொண்டேஇருப்பதால், பென்ஷன் தொகை வருடா வருடா வருடம் குறைந்து கொண்டே போகிறது என்பதுதான் அர்த்தம்.

2. பிராவிடெண்ட் பண்டுக்காகத் தொகைளை ஊழியர்கள் கட்டுகிருர்கள். அவர்கள் கட்டும்போது இருந்த ரூபாயின் மதிப்பு அவர்கள் அந்தத் தொகையைப் பெறும் போது மிகவும்குறைந்துபோய் விடுகிறது. அவர்களுக்கும் இழப்புத்தான்.

3. இன்ஷுரன்ஸ் பாலிஸிக்கு இப்போது பிரீமியம் கட்டுகிறோம். பணத்தை நாம் பெறும்போது ரூபாயின் மதிப்பு இன்னமும் கீழே போயிருக்கும் ஆகையால், நஷ்டம் நமக்குத்தான்.

4. பாங்குகளில் பணம் போடுவர்களும், அரசாங்கப் பத்திரங்களை வாங்குகுபவர்களும் இதே வழியில் அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டு வருகிருர்கள்.

இந்தச் சேமிப்புகள் எல்லாவற்றையும் திரட்டி அரசாங்கம் கனரகத் தொழில்களில் முதலீடு செய்து விடுகிறது. பணத்தின் மதிப்பு உயர்ந்திருக்கும்போது, நம்மிடம் இருந்து இதற்கான பணத்தைப் பெற்றுகொள்ளும் அரசாங்கம், பணத்தின் மதிப்பு கீழே இறங்கி விடும் போது அதே தொகையைத் தான் நமக்குத் தருகிறது. இதனல் குடி மக்களுக்கே நஷ்டம்.

சுருங்கச் சொன்னல், ஏழைகளிடமிருந்தும், நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்தும் அரசாங்கம் அடிக்கும் கொள்ளைக்குப் பெயர்தான் 'பண வீக்கம்.' (நன்றி: 'துக்ளக்')

- எம். ஆர். பய் -

# அமைச்சர்களுக்கு 'அட்வான்ஸ்' அழைப்பு!

## "குளிர்த்தி" போட்டுப் பணத்தைச் சுருட்டவா?

தங்கள் நல்லடிமைப் பாங்கைக் காட்டத் தருணம் பார்த்திருக்கும் சிலர் இப்பொழுதே யாழ்ப்பாணம் வரவிருக்கும் சிங்கள ஏகாதிபதிய அமைச்சர்களை வரவேற்கத் தொடங்கி விட்டனர். அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவையும் அவருடன் படை எடுத்து வரவிருக்கும் அமைச்சர்களையும் நிலப்பாவாடை விரித்து வரவேற்பதற்கு புங்குடுதீவுக்கு வருகை தருமாறு இப்பொழுதே 'அட்வான்ஸ்' அழைப்பை ஒரு சமூகசேவை சங்கக் காரியதரிசி விடுத்துளர். "இரப்பானைப் பிடித்த தாம் பறப்பிராந்து" என்பார்கள். அமைச்சர்களை அழைத்துச் சிகரம் வைத்து ஆலவட்டம் வீசி, மாலைசூட்டி நல்ல விருந்தும் போட்டால் அவர்கள் அள்ளி அள்ளி வீசுவார்கள் எனும் அங்கலாய்ப்பு இன்னும் சில அடிமைப் புத்தியுடையவர்களிடம் காணப்படுவது கவலைக்குரியது.

இந்தச் சங்கச் செயலாளர் பிரதம அமைச்சரைப் புங்குடுதீவுச்கு அழைக்கப் பெரும்பாடுபட்டாராம். வாய்க்கவில்லையாம். பிரதமர் பிரேமதாசாவின் திருப்பாதம் புங்குடுதீவு மண்ணில் பட்டிருந்தால் புங்குடுதீவு பொன்னுலகமாக மாறியிருக்குமென்று பகற் கனவு காணுகிருர் போலும் இந்தப் பெருமகன்.

பிரதமர் பிரேமதாசா நயினதீவுக்குச் சென்ருர். அங்குள்ள சில பச்சோந்திகள் ஆயிரக் கணக்கில் செலவு செய்து வரவேற்றனர். அவர்கள் அடைந்த லாபம் என்ன? ஒன்றுமில்லை. வேருர் மதத்தைச் சேர்ந்தவர் லாபமடைந்துளர்.

புளியங்கூடலில் சேகரம் பிறதர்சின் பணத்தில் சிகரம் கட்டி சிங்காரச் சோடனைகள் செய்து பிரதமரைவரவேற்றுப் பொன்னடை சூட்டினர்கள் சிலர். புளியங்கூடல் பெற்றதென்ன?

பிரதமர், பலஅமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பா. உ.க்கள் புடைசூழப் பவனி வந்தார். அவர் வருகையால் யாழ்ப்பாணம் அடைந்த நன்மை என்ன? பனைகளுக்கும் தந்திக்கம்பங்களுக்கும்வெள்ளை பூசிப் பணத்தை வீணக்கினர். இதனல் ஏழைத்தொழிலாளர்கள் பலருக்கு வேலை கொடுக்க முடியவில்லை. அவர்களை அவலப்படச் செய்ததுதான் கண்டபலன்.

கோடிக்கணக்கான ரூபாக்களைச் சிங்களப் பகுதிகளிலே புது வீதிகளுக்கும் பாலங்களுக்கும், மதவுகளுக்கும் சென்ற வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய பிரதமர், மகாதேவாப் பாலத்துக்கு ஒரு சதத்தையேனும் ஒதுக்கினரா? யாழ்ப்பாணக்கச்சேரிக் கூட்டத்தில் இப்பாலத்துக்குப் பணந்தருமாறு கேட்கப்பட்டபொழுதும் ஒரு சதந்தானும் கொடுக்க அவர் முன்வரவில்லையே!

அமைச்சர்களுக்குக் "குளிர்த்தி"போடும் சாட்டில் மக்களின் பணத்தைச் சுருட்ட எண்ணுபவர்களுக்கு மட்டுமே அமைச்சர்களின் வருகை பயன்படுமேயன்றி வேறெந்த நன்மையையும் தராதென்பதை ஏமாற்றிப் பிழைக்க முற்படுபவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். சிலந்தியின்வலையில் போய்விழும் ஈக்களைப் போலப் பகுத்தறிவுள்ள மக்கள் தாமும் கெட்டு இனத்துக்கும் பழி சேர்க்கக் கூடாது.

# கூடிநின்று பிதற்றும் கும்பல் எது?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிராம யாத்திரையினைக் கண்டிக்கும் சுதந்திரன, கூட்டத்திலே "கூடிநின்று பிதற்ற வேண்டாம்" என அறிவுரையும் கூறியுளது. இந்த அறிவுரை கூறிய சுதந்திரன் 'தமிழ் ஈழம் அடங்கும் தந்தை செல்வா நினைவுக் கருத்தரங்குகளையும் கூட்டங்களையும் நடத்தித் தமிழர் விடுதலைக் கூட்டணி (தீவிரவாத அணி) தமிழ் ஈழ விடுதலைப் பிரசாரஞ்" செய்யப்போவதையும் ஆதரித்து ஆர்ப்பரிக்கிறது.

**'அவன்கிடந்தான் குடிகாரன்; எனக்கு இரண்டு பிழாக் கள்ளு ஊற்று'** என்று கூறும் குடிகார உலுத்தனைப்போல சுதந்திரன் பேசுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்குகளில் கூவிப் பிதற்றவேண்டாம் என்று கூறும் சுதந்திரனே! தீவிர அணிக் கருத்தரங்கிலே உங்கள் கோஷ்டி பேசாமல் வாயைக் கட்டிக்கொண்டு ஆடப்போகின்றீர்களா? தீவிர அணியின் கருத்தரங்கில் திட்டுவது கூடிப்பிதற்றலாகாதா? யாருக்குக் காதுகுத்துகிறது சுதந்திரன்? பொய்யும் புரட்டும் ஏமாற்றும் எத்தனை நாளைக்கு நிலைக்கும்?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரையும், தந்தை செல்வாவின் பெயரையும் சொல்லாமல் பிழைக்க முடியாத இந்தத் தீவிர அணியின் உறுப்பினர்கள் யாவர்? தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து கட்டுப்பாட்டை மீறியதற்காக விலக்கப்பட்டவர்களும், பதவி கிடைக்காமல் பதறுவோர் சிலரும் இடையிடையே யாரோ ஒருவர் வீட்டில் குசுகுசு கூட்டம் நடத்தித் தமிழ் ஈழத்தைப் பெற்றுவிடுவார்களா? இவர்கள் ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணிப் போர்வையைப் போர்க்கிருர்கள்?

சொந்தக் காலில் நிற்கமுடியாத அரசியல் முடவர்கள் ஆரவாரஞ் செய்வதால் என்ன கிடைக்கப்போகிறது. தங்கள் கருத்தரங்குகளை நடத்த முடியாமல், கருத்தரங்குகளை ஒழுங்குசெய்துநடத்துவோரை விளம்பரம்மூலம் தொடர்பு கொள்ள அழைப்பது தீவிர அணியின் கையாலாகாத்தனத்தைக் காட்டவில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்குப் புத்திசொல்ல யார் இந்த ஜே. ஆர்.?

## சிறிலங்கா நாட்டில் 'தர்மர்' சிங்கநாதம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடவேண்டுமெனச் சொல்ல சிறிலங்கா ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு எவ்வித உரிமையுமில்லை. மிக அண்மைக் காலமாக அவர் நிகழ்த்திவரும் உரைகள் இந்நாட்டிலே இனத்துவேஷத்தைக் கிளப்ப முயற்கிகள் நடைபெறுகின்றனவா என்ற சந்தேகத்தை உண்டாக்குவதுடன், தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாததினல் மக்களைத் திசைதிருப்பும் விதத்திலேயே அவை அமைந்திருக்கின்றன,

இவ்வாறு தென்னிலங்கையில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் மானிப்பாய் பா. உ. தர்மலிங்கம் காரசாரமாகப் பேசினர்.

காகவத்தை பட்டின சபை மைதானத்தில் நடைபெற்ற மேற்படி ஐந்து கட்சிகளின் கூட்டத்தில் 'தர்மர்' பேசுகையில் தெரிவித்ததாவது;-

ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன இதேமைதானத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் சில வினக்களைச் சில தினங்களுக்குமுன் எழுப்பியிருக்கிருர். அதே மைதானத்தில் அவரது வினக்களுக்கு நான் பதிலளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தமிழர் விடுதலைக்கூட்டணி அதன் தனிநாடு கொள்கையைக் கைவிட்டுவிட்டதா? அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி என்பன் கூட்டணியின் தனிநாடு கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்றனவா? இவர்களின் கூட்டில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று ஜே. ஆர். கேள்வி எழுப்பியிருக்கிருர்.

இதில் எவ்வித மர்மமும் இல்லை. எவரும் தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்கவோ ஏற்றுக்கொள்ளவோ இல்லை. கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் தமிழர்விடுதலைக்கூட்டணியும் ஏனைய எதிர்க்கட்சிகளும் ஐ. தே. க. தலைமையில் பல நடவடிக்கைகளை அரசுக்கு எதிராக மேற்கொண்டன. சத்தியாக்கிரகங்களில்கூட நாம் அப்போது பங்குகொண்டோம். அப்போது எமது கொள்கையைக் கைவிட்டால்தான் இந்த அணியில்சேரலாம் என்று திரு. ஜே. ஆர். ஜாவர்த்தன எம்மிடம் கூறினரா? அல்லது எமது கொள்கையைஏற்கும்படி நாம் அவரிடம்கோரினேமா? ஆனல் இன்று திரு. ஜே. ஆர். இக்கேள்வியைஎழுப்புவது விந்தையாக இருக்கிறது. இனத்துவேஷத்தைக் கிளப்பும்முகமாகவே இக்கேள்வியை அவர் எழுப்புகிருரா எனச் சந்தேகத்தையும் எழுப்புகிறது.

ரோம் சாம்ராஜ்யத்தின் அந்திக் காலத்தில் ரோமானிய ஆட்சி மக்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாதிருந்த வேளை, மக்களைத் திசைதிருப்ப 'சர்க்கஸ்' களை அமைத்துக் கத்தோலிக்கர்களை சிங்கங்களுக்கு இரையாக்கினர்கள். இன்று ஐ. தே. க. 1977 ல் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாதநிலையில் மக்களின் எண்ணங்களைத் திசைதிருப்ப சிங்கப்பூர் பிரதமருக்கும், ஜப்பானிய இளவரசர் தம்பதிகளுக்கும், இவ்வாண்டு நடுப்பகுதியில் ஆங்கிலேய மகாராணிக்கும் 'பெரஹரா' வைத்து மக்களைத் திசைதிருப்ப அரசு எண்ணுகிறது. இனத்துவேஷத்தைக் கிளப்புவதனுலோ 'பெரஹர' நடத்துவதனுலோ மக்கள் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாது. வாழ்க்கைச்செலவு, பொருள்களின் விலை, வாழ்க்கைத்தரம் இவைஇன்று மோசமான நிலைக்குச் சென்றிருக்கின்றன. இந்நிலைக்கு உலக பணவீக்கம், பொருள்களின் விலை ஏற்றம்தான் காரணமென்று கூறித் தப்பித்துச்செல்ல அரசு முயல்கிறது.

உலக பணவீக்கம், பொருள் விலை ஏற்றம் என்பன உண்மையானவையே. ஆனல்இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமை முற்றிலும் இவற்ருல் மட்டும்ஏற்பட்டபாதிப்பு அல்ல. அரசின் அவசியமற்ற டாம்பீகதிட்டங்களும் லஞ்ச ஊழலும் திறமையற்ற நேர்மையற்ற ஆட்சியுமே இந்நிலைக்குக் காரணம்.

புதிய அரசியலமைப்பின் கீழ், அதிகாரங்கள் குறைக்கப்பட்டுவிட்ட பாராளுமன்றத்துக்கு கோடி ரூபாய் செலவிட்டு ஒரு மாளிகை எதற்கு?

மகாவலிக்கு கொட்டும் பணத்தில் ஒரு சிறியளவு மட்டும் செலவிட்டு தூர்ந்துபோன புராதன குளங்களை புனரமைப்பின் அவற்றின் பயன் எவ்வளவு?

சிங்கப்பூரைமனதில் வைத்து ஆரம்பித்த வர்த்தக வலயம் இன்று ஆடைகள் ஏற்றுமதி வலயமாகவே இருக்கிறது. ஏற்கனவே இதனைச் செய்து வந்த ஸ்தாபனங்களுக்கு சிறு உதவியை மட்டும் வழங்கியிருந்தால் அது பெருஞ்சேவையாகியிருக்காதா?

கடந்த ஆட்சிக் காலத்தில் லஞ்சம் ஆயிரம் ரூபாக்களாக பேசப்பட்டது. ஆனல் இன்று அது லட்சம் ரூபாவாக இருக்கிறது. இவையே இன்றைய வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு: பொருள்கள் விலையேற்றத்துக்கு உண்மையான காரணங்களாகும். அதனல்தான்சர்வதேசநாணயநிதியம்மேலும்நிதி உதவிக்கு பல நிபந்தனைகளை விதித்திருக்கிறது. ஆரம்பித்த திட்டங்களையே பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இன்று அரசு உளது. இந்த நெருக்கடிகளை மூடி மறைக்கவே ஜனதிபதி இத்தகைய பேச்சுக்களில் முயல்கிருர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி தனது கொள்கையைக் கைவிடவேண்டுமென்று கோருவதற்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஐக்கிய தேசியக் கட்சியின் 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் பிரச்சனைகளை அவர் விளக்கியுள்ளார். குடியேற்றம் கல்வி, உத்தியோக வாய்ப்பு, மொழி ஆகிய விடயங்களில் தமிழர்களுக்கும் பிரச்சனைகள் இருக்கின்றன என்று அந்த விஞ்ஞாபனத்தில் அவர் கூறினர். இப்பிரச்சனைகள்தான் தமிழ் மக்களின் தனிநாடு கோரிக்கைக்கு கராணம்என்பதனையும் அவர் ஏற்றர். தான் ஆட்சிக்கு வந்ததும் இப்பிரச்சனைகளைத் தீர்க்க வழிவகுப்பேன் என்றும் கூறினர். இப்பிரச்சனைகளைத் தீர்க்க சிங்கள மக்களின் ஆணையையும் பெற்ருர். ஆனல் இந்த நிலையில் கூட தமிழ்மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க தகுந்த நடவடிக்கை எதனையும் அவர் எடுக்காதுகோரிக்கையைக்கைவிடக் கோர அவருக்கு என்ன அருகதை இருக்கிறது:

திரு. தர்மலிங்கத்தின் ஆங்கிலப்பேச்சு சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இக் கூட்டத்தில் கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா உட்படப் பலர் பேசினர்.

## கேள்விப்படுகிறேம் - உண்மையா?

'சுடர்' இதழில் 'அரி' என்பவர் மனம்விட்டுச் சில வார்த்தை மணிகளை உதிர்த்து வருகின்ருர்' மாசி இதழில் அவர் உதிர்த்த அந்த 'மணிகள்' தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைமீது வீசப்பட்ட கற்களாகவே காட்சியளித்தன. இதனைக் கண்ணுற்ற 'சுதந்திரன்' ஆசிரியருக்கு ஒரே கொண்டாட்டம். அவற்றைக் கவனமாகப் பொறுக்கி எடுத்துத் தனது பத்திரிகையின் முன்பக்கத்தை அலங்கரித்துவிட்டார்.

'சுதந்திரன்' மூலமே இந்தச் 'சுந்தர மணி' களைக்கண்ட 'சுடர்' ஆசிரியருக்கு அடக்கமுடியாத ஆத்திரம் வந்ததாகவும், அதனல் எனக்குத் தெரியாமல் இத்தகைய மணிமாலைகள் கோக்கும் வேலை நடந்தால் தான் ஆசிரியராக இருக்கப் போவதில்லையென்று அவர் நிர்வாகத்திடம் தெரிவித்துவிட்டதாகவும் விஷயமறிந்த ஒருவர் கூறுகின்ருர்.

# உடுப்பிட்டித் தொகுதியில் சாதிவெறிக்கு உரமிடுவது யார்?

தமிழ் ஈழ விடுதலைக்கு தங்களை அர்ப்பணித்த இலட்சிய இதயங்களே, உடுப்பிட்டித் தொகுதியில் கிராமயாத்திரையின்போது நடந்த குழப்பங்களை விளைவித்தோர் யார் என்பதை இனம் கண்டு கொள்ளுங்கள். வல்லை உப்புவெளிச் சந்தியில் தான் அன்று தந்தை செல்வாவின் நினைவுத் தூபி திறப்புவிழாவில். கலந்துவிட்டு வந்த எமது பா. உ. திரு. த. இராசலிங்கம் அவர்களை படுகொலை செய்ய முயற்சிக்கப் பட்டது. அதே சந்தியில்தான் கூட்டணிப் பிரமுகர் எனக் கொடும்பாவி ஒன்று தொங்க விடப்பட்டது. இதைச் செய்தவர்கள் யார்என இப்போது உணருங்கள். சாதிஎன்ற வியாதியைத் தீர்த்துவிட்டோம்என நாம் வீராப்புப் பேசுகிறேம். உண்மைநிலை என்ன? கிராம யாத்திரையில் எந்தத்தொகுதியிலும் இல்லாத குழப்பங்கள் உடுப்பிட்டியில்! ஏனெனில் சரித்திரம் படைத்து விட்டோம், உடுப்பிட்டியில் சாதி என்ற பேயை விரட்டினேம் என்று கூறினேம். இன்று நடப்பது ஒவ்வொன்றையும் எண்ணிப் பாருங்கள்.

பருத்தித்துறைத் தொகுதி கிராம யாத்திரையிலும் உடுப்பிட்டி கிராம யாத்திரையின் போது துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்ட த.வி.கூ. கெருடாவில் கிளைச் செயலாளர் என்றவரையும், அவர்பின் வந்த கும்பலையும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். வல்வெட்டித் துறைக் கரையோர மக்களுக்கு கெருடாவிலில் உயர் சாதியினரிடமிருந்த நல்லதண்ணீரைத் தரமறுத்தது அந்தக் கும்பல். இதற்காக வல்வை நகர சபையிலிருந்து தங்களைப் பிரித்துவிடு என்று தலைவர்களைக் கேட்டது. தலைவர்களது விசாரணையில் நகரசபைத்தலைவர் தாம் செய்த சேவையில் குறிப்பிட்ட கெருடாவிலுக்கே 22 வீதம் அபிவிருத்தி செய்ததாகப் புள்ளி விபரத்துடன் எடுத்துக் காட்டினர். தலைவர்கள் இவர்களின் துவேஷமனப் பாங்கை உணர்ந்தார்கள். இந்தச் சாதி வெறியர்கள் தான் சிலகருத்தரங்கு நடந்த இடங்களில் குழப்பம் விளைவித்தார்கள். வெட்கக்கேடான இந்த நிலை நம்மிடம் இருக்கலாமா? சுடலைக்குள் இருக்கும் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்க முயற்சி செய்தார் நகரபிதா அவரது செயல்பாட்டை வன்செயல் மூலம் தடுத்து இடை நிறுத்தினர்கள். வல்வெட்டித் துறை மக்களுக்கு கெருடாவிலிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாதநிலை. தீவிரவாதிகளே சற்றுச் சிந்தியுங்கள். குடிக்க நல்ல தண்ணீர் இல்லாமல் வல்வைமக்கள் வாட கெருடாவிலில் வற்ருத கிணறு இருப்பது நியாயமா? இவர்கள் துண்டுப்பிரசுரம் விடுகிருர்கள் நியாயமா? நீதியா?

அதேசெயலாளர் வீட்டிற்கு முன்பாக உடுப்பிட்டி பா. உ வைத் திட்டினன் ஒருவன் இதற்கு அதே செயலாளரும் அந்தக் கும்பலும் எடுத்த நடவடிக்கை என்ன? பா. உ. ஒருவருக்கு இந்தக் கதியென்ருல் உரிமை மறுக்கப்பட்ட தமிழ்ச் சகோதரர்களின் நிலை என்ன? இவர்களும்கூறுகிருர்கள் தமிழ் ஈழம் அமைப்போம் என்று சற்று சிந்தியுங்கள் உண்மை நிலைஎன்ன? சாதிஎன்றவியாதி செத்துவிட்டதா? பதில்கூறுங்கள் ஒருபகுதி மக்களை நாம் அடக்கி வைத்துக் கொண்டு எம் விடுதலையை நாம் எதிர் பார்க்கலாமா? கிடைக்குமா?

கன்பொல்லை இராசகிராமத்தில் தலைவர்களை அன்புடன் வரவேற்ருர்கள். தலைவர்களுக்கு உறுதிமொழி கொடுத்து விட்டார்கள். கன்பொல்லை இராச கிராம மக்கள் த.வி·கூட்டணியின் தமிழ்ஈழ விடுதலைப்படை ராச கிராமத்திலே ஆரம்பமாகின்றது என்று சமூகவிடுதலை வேண்டி உயிரிழந்தமூன்று தியாகிகளை (உரிமைகுறைந்த மக்கள்) மாலையிட்டுக் கௌரவித்தார்கள் நம் தலைவர்கள்.

ஏசிப் பேசியது ஒருகும்பல், ஒருகும்பல் கல்லால் எறிந்து உடைத்தது உடுப்பிட்டி பா.உவினதும், கிளிநொச்சி பா. உ வினதும் ஜீப் வண்டிகளை. அது மட்டுமல்ல, அங்கும், (சாமியன அரசடியில்) எமது பா.உ. திரு த. இராசலிங்கம் அவர்களை சுற்றி வளைத்து கொலைசெய்ய

(8-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பஸ்ஸில் ஏறுவதற்கு 30 சதம் கட்டணம்; பிரயாணத்துக்கு வேறு"**

— பத்திரிகைச் செய்தி

"அப்பிடியோ சங்கதி? 'சீற்'றில் குந்திஞல் அதுக்கு எவ்வளவு கட்டணம்? எழுப்பி நிற்பவருக்கு, பின்இறங்கும்போது இறங்குவதற்கு எவ்வளவு கட்டண விகிதம்?" என அமைச்சர் முகம்மதுவிடம் கேள்வி எழுப்புகிருள் மரக்கறிச்சந்தை மாரியம்மாள்!

— அக்கினிக்குஞ்சு

## உடுப்பிட்டித்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடப் பட்டது. தன் பெற்றபிள்ளையைவிட மேலாக தன்அரவணைப்பிற்குள்வைத்து சொற்போர்மட்டுமல்ல, வீரப் போரும் புரிந்து உடுப்பிட்டிபா. உ. வைக் காப்பாற்றிஞர் எம் அரியதலைவர் திரு.மு. சிவசிதம்பரம் அவர்கள். சிந்தியுங்கள் தமிழ்ஈழ விடுதலைப்படை வீரர்களே இவர்களெல்லாம் எப்பொழுது இயக்கத்திற்குள் வந்தார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? யார் இவர்களைத் தயார் செய்தார்கள்? இவர்களால் இன்னும் இயக்கம் பின் தள்ளப்படுகிறது. வல்வை மக்களுக்குக் குடிதண்ணீருக்காக வாதாடிஞர்கள்; எதிர்ப்பைச் சம்பாதித்தார்கள் நம்தலைவர்கள், அதே தலைவர் ஒருவரின் ஜீப் வண்டிக்கு வல்வையில் தீ வைக்கப்பட்டது, நீதியா? நியாயமா?

எம் உயிர்களைக்கூட தியாகம்செய்ய நாம் தயாராயிருக்கிறேம். தலைவன் வழி செல்லாத எந்த சக்தியும் தன் முயற்சியினுல் வெற்றி பெற முடியுமா? தலைவர்கள் வழி செல்வோர் எம்முடன் இருக்கும் சாதிப் பேயை எரிக்க வேண்டும் அதற்காக என் உயிரும் என்ருலும் தயார்.

எமக்குள் ஒரு பகுதியாரை ஒடுக்கி வைத்துக் கொண்டு தமிழ்ஈழம் அமைக்கமுடியுமா? எம்மில் ஒரு பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஒரு பகுதி யு. என். பி., ஒருபகுதி எது என்ருலும் சரி ஒருபகுதி போலித் தீவிரவாதம் பேசுவோர் ஒரு பகுதி தான்வாழ எண்ணம், ஒருபகுதிக்குசாதிஎன்றவியாதி இப்படிப் பல பகுதிகளாகப் பிரிந்திருக்கிறேம். இவர்களை நாம் ஒன்றுபடுத்த வேண்டும்.

சி. சிவபாலசிங்கம்
செயலாளர்
த. வி. கூ. பொலிகண்டி கிளை

# சிறிலங்காவிலிருந்துவரும் சிங்களப் படைத் தளபதி!

## பெரேராவுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

மக்களின் குறைகளை நேரே அறிந்து தீர்ப்பதற்கு யாழ்மாவட்டத்துக்கு அமைச்சர்களுடனும் பரிவாரங்களுடனும் படைஎடுத்துவரும் அமைச்சர் பெஸ்ரஸ்பெரேரா அவர்களே!

முன்னர், பிரதமஅமைச்சர் பிரேமதாசா, ஏழு அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள், சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் யாழ்ப்பாணம் வந்து என்னத்தைக் கொட்டிப் போட்டுப் போயிருக்கிருர்? லட்சக்கணக்கான ரூபாக்களைச் செலவு செய்து அரசபவனியும் ஆரவார ஊர்வலங்களும், அரசியற் கூட்டங்களும் நடத்தியதால் யாழ்ப்பாணமாவட்டம் அடைந்த நன்மையை எடுத்துக் கூறிவிட்டு உம்முடைய படையுடன் வாரும்!

பிரதம அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வந்ததால் வீதிகளுக்கு அருகில்உள்ள தந்திக் கம்பங்களுக்கும், மின்சாரக் கம்பங்களுக்கும் வெள்ளைபூசிப் பணத்தை விரயமாக்கியதைத் தவிர வேறென்ன நடந்தது. வீதிகள் சில யாழ்மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலே அளவுக்கு மிஞ்சிச்செலவிட்டுத் திருத்தப் பட்டன. இதனுல் ஆண்டாண்டாகப் பிழைத்துவந்த ஏழைத்தொழிலாளர் பலரைப் பணம் செலவழிந்தமையால் வேலையில்லை என்று கூறி அவர்களின் வயிற்றிலடிக்கிருர்களே! இந்தக் கொடுமை தான் கைமேற் கண்டபலன்.

யாழ்ப்பாணக் கச்சேரியிலே பிரதம அமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் சேர்ந்து கூட்டிய மாவட்ட இணைப்புக்குழு கூட்டத்திலே மகாதேவாப் பாலவேலைக்குப் பணம் கொடுக்குமாறு யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள் ஒருசதத்தைத்தானும் பிரதம அமைச்சர் தமது அமைச்சின் பணத்திலிருந்து கொடுக்க முன்வரவில்லையே! சிங்களப்பகுதிகளில் புதியவீதிகள், பாலங்கள், மதவுகள் அமைப்பதற்கு மொத்தமாக இருபதுகோடிரூபாவுக்கு மேல் வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கிய பிரதம அமைச்சர் யாழ்மாவட்டத்திலுள்ள மகாதேவா பாலத்துக்கு இருபது சதத்தைகூடக் கொடுக்க விரும்பவில்லையே! (வளரும்)

## தமிழ்த்தொழி...

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

தொழிலாளர்களுக்கு காவலாளிகள் பதவிகள் கொடுக்கப்படுமென கூறியநிர்வாகம் ஒரு சிலருக்குமாத்திரம் கொடுத்துவிட்டு, வென்னப்புவா தொகுதியிலிருந்து முப்பதுக்கு மேற்பட்ட சிங்களவர்களை இறக்குமதிசெய்து அப்பதவிகளில் நியமித்துள்ளது. தமிழ்ப் பகுதிகளில் எப்படியாவது சிங்கள ஊடுருவலை நடத்தியே தீர வேண்டுமென்று நினைக்கும் இந்தஅரசின் பச்சையான இனவாதக் கொள்கைக்கு இச்சம்பவம் நல்ல ஒரு சான்ருக விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

1977ல் ஆட்சி பீட மேறியதிலிருந்து யு. என். அரசு கடைப்பிடித்து வரும் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாலன்றி இந்த நாட்டில் ஏழை -- எளிய பாட்டளிகள் மக்கள் வாழமுடியா என்ற உணர்வு மக்களிடையே வேகமாகப் பரவிவருவதை அவதானிக்கமுடிகின்றது.

## உடுப்பிட்டி சம்பவம் ஒரு திட்டமிட்ட சதி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிராமயாத்திரையின் போது உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த கரவெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் சாதி வெறியை முன் வைத்துத் தூண்டிவிடப்பட்ட ஒரு திட்டமிட்ட அரசியல் சதி என்று 20-3-81ல் யாழ்- த. வி. கூ. செயலகத்தில் கூடிய கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப் பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டபடி, கிராமயாத்திரையை முல்லைத் தீவிலும், வவுனியாவில் எதிர் வரும் 28-ம் திகதி முதல் 31ம் திகதி வரையும் கிளிநொச்சியில் ஏப்பரல் 3முதல் 4ம் திகதி வரையும் மன்ஞரில் ஏப்பிரல் 20 முதல் 23வரையும் நடத்துவதென்றும் செயற்குழுவில்தீர்மானிக்கப்பட்டது.

இதுதவிர, தமிழீழத்துக்கான யாடபு தயாரிப்பதில் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களிடமிருந்தும் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. இதுசம்பந்தமாக திரு. வைகுந்தவாசன் தலைவர் அமிர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தைச் செயற்குழு கவனத்துக்கெடுத்துக் கொண்டது.

கூட்டணியின் நிதிச் செயலாளரான திரு. கதிரவேற்பிள்ளை உடல்நலம் குன்றியிருப்பதனுல் அவருக்குதவியாக சட்டத்தரணி திரு. குமரகுருவை நியமிப்பதெனவும் செயற்குழு தீர்மானித்தது.

## அறவழிப்போராட்டக் குழுவின் புதிய பொறுப்பு

சமூகப்பணிகளில் ஈடுபட்டு வரும் அறவழிப் போராட்டக்குழு, தந்தை செல்வாவின் நினைவாலயத்தைத் துப்பரவு செய்யும் புதிய பணியை பொறுப்பேற்றுள்ளது.

தந்தையின் பிறந்த நாளை முன்னிட்டு இம்மாதம் 28 ம் திகதி மேற்படிப் பணியை அறவழிப்பேராட்டக் குழு ஆரம்பிக்கவிருக்கின்றது-

## 'தீவிரவாதி'களின்....

( 3-ம் பக்கத் தொடர்ச்சி )

விரோத சக்திகளுக்குத் தாங்கள் இடம் அளிக்கின்ருர்கள் என்பதை இந்த விருதுக்கு வேட்டையாடும் 'தீவிரவாதிகள்' இப்போதாவது உணர்கிருர்களா? கன்பொலை மாதிரிக் கிராமத்தில் மக்கள் வேதனையோடு 'சுதந்திரன்', தம்பிஇராசலிங்கத்தைச் சாடுவதற்குத் தெரிந்தெடுத்திருப்பது சாதிவெறிக்குத் தூபம் போடவா என்று கேட்டார்கள். கூட்டணியையும் தமிழ் ஈழ இலட்சியத்தையும் அழிக்க முனைந்து நிற்கும் அதிதீவிர இடதுசாரி இயக்கங்கள் சிலவற்றுக்கு நல்ல போர்வை நம்மவர் சிலர் படைத்துக் கொடுத்திருக்கும் "தீவிரவாதம்" என்ற ஏட்டுத்திரை என்பதை இரண்டு வாரங்களுக்கு முன் இலட்சிய இதயங்களுக்கு விளக்கினேன். இப்போது தமிழ் இனத்தை சாதி அடிப்படையில் கூறுசெய்து காலத்திற்கொவ்வாத தீண்டாமையையும் மீண்டும் நிலைநாட்ட முற்படும் கும்பலுக்கும் நல்ல முகமூடி 'தீவிரவாதம்'. ஒரு கருத்தரங்கில் அதிதீவிரவாதியாகச் சுதந்திரனின் கேள்விகளைக் கேட்டார் ஒரு இளைஞர், பின் அறிந்த அளவில் அவர் யூ. என். பீ. அமைப்பாளர் ஒருவரின் செயலாளர். அவர் போன்றவர்களுக்கும் ஒரு நல்ல கேடயம் "தீவிரவாதம்". இத்தனைக்கும் காரணம் இன்று தீவிரவாதம் பேசுவோர் எல்லாம் பேச்சில் கனல்கக்கும் தீவிரம்-- எழுத்தில் பொறி பறக்கும் தீவிரம்-- செயலில் சுத்த பூச்சியமாயிருப்பவர்களாயிருப்பதே, இது எல்லோர்க்கும் வசதியான "தீவிரவாதம்" தமிழ் ஈழ இலட்சியத்தைக் குழிதோண்டிப்புதைக்க முனையும் இடதுசாரிக்கும் --- சாதிவெறிக்கும் ஒரு போர்வை தேடும் பிற்போக்குவாதிக்கும்-- ஆளுங் கட்சியின் தாசரிாக ஆயிரக்கணக்கில் உழைக்கும் அமைப்பாளரின் பங்காளருக்கும்-- எல்லோருக்கும் வாய்ப்பான திரை "தீவிரவாதம்".

இந்தப் போலி வாதங்களைவிட்டு இன ஒற்றுமையின் அடிப்படையில் தமிழ் தேசிய இனத்தின் விடுதலையைத் --- தமிழ் ஈழ சுதந்திரத்தைக் காண வருமாறு இலட்சியப் பற்றுள்ள இயதங்களை எல்லாம் அழைக்கிறேன்.




தென்னகத்தில் மிகுந்த பரபரப்பையூட்டி வெற்றிவிழாக் கொண்டாடிய "வெள்ளி விழா" வண்ணச் சித்திரம்

**சாந்தி** -(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் காலை 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30

சரத்பாபு, சுமலதா, சுந்தரராஜன், எம். என். ராஜம் ஆகியோர் நடித்த

பி. எஸ். வீரப்பா அளிக்கும்....

**திசை மாறிய பறவைகள்**

(முற்றிலும் மாறுபட்ட, திசை திருப்பமான கதை)





உதயசூரியன் வெளியீட்டகத்தால் த...ரிக்கப்பட்டுயாழ்.புனிதவளன் கத்தோலிக்கஅச்சகத்தில் 27-3-81ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org